www.tamilarangam.net

# சுவடுகள்





கொள்கையற்ற கோபால்சாமி

கருணாநிதியின் "கூட்டு"

புலம்பெயர்ந்த தமிழர்நல மகாநாடு

"டமில் நாட்" ஆகிவரும் தமிழ்நாடு

தொடரும் நிகழ்ச்சிப் புறக்கணிப்பு

நோபல் பரிசின் இழுபறிகள்





## புலிகள்_ முஸ்லீம்கள் புதிய உறவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கதைசொல்லி மகிழ்வித்த பாட்டிக்குக்

## கலாச்சாரத் திணைக்களத்தின் பரிசு

**சிவன்**

தமிழில் சிறுவர்களை மகிழ்விப்பதை மாத்திரம் நோக்காய்க் கொண்டு படைப்புகள் வெளிவருவது மிகவும் குறைவு. சிறுவர் இலக்கியம் என்ற சொல்லே அறியப்படாத ஒரு சொல்லாகி விட்டது போன்ற நிலையே நிலவுகிறது. தாய்வழியாகப், பாட்டி வழியாக நாம் கேட்டு மகிழ்ந்த கதைகளைவிடப் புதிதாக வருவது மிகமிகக் குறைவு. வருவனவும் பாடல்களாகவே பெரும்பாலும் உள்ளன. கதைகளாகவோ, நாடகங்களாகவோ தமிழில் புதிய சிறுவர் இலக்கியங்கள் அண்மைக்காலங்களாக வரவே இல்லை என்றே கூறலாம். ஈழத்தில் சி.மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம் போன்றோரது சில படைப்புகள் இதற்கு விதிவிலக்கு. புதிய கதைகள், அல்லது பிறமொழிக் கதைகள் பெரும்பாலும் பத்திரிகைகளின் சிறுவர் பகுதியில் வெளிவரும் ஒன்றாகவே உள்ளன. தாம் விரும்பிய நேரம் சிறுவர்கள் படிக்கவும், கேட்டு மகிழவும் எனப் படைப்புகள் நூல் வடிவிலோ, ஒலிநாடா வடிவிலோ வருவது அரிது. இந்த வகையில் நோர்வேஜியச் சிறுவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

நோர்வேஜியப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கக்கூடியதாகவோ, நூலகத்தில் இரவல் பெறக்கூடியதாகவோ ஏராளமான கதை நூல்கள் சிறுவர்களுக்காக என்று உள்ளன. உலகின் பல பாகங்களிலும் இருந்து ஏனைய மொழிக் கதைகள் (காகம் கல்லுப்போட்டுத் தண்ணி குடித்த கதை, நரியும் கொக்கும் விருந்துண்ட கதை உட்பட) மட்டுமன்றி, நோர்வேஜியக் கலாச்சாரப் பின்னணியில் சிறுவர்கள் கேட்டு மகிழ என ஏராளம் கதைகள் உள்ளன. சிறுவர்கள் புறக்கணிக்கப்படக் கூடியவர்கள் அல்லர்; அவர்களது கற்பனை விசாலிப்புக்கும் மன விருத்திக்கும், சிறுவர் இலக்கியங்கள் அவசியமானவை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட ஒரு சமூகமாகவே நோர்வேஜிய சமூகத்தைக் காண முடிகிறது.

நோர்வேஜியச் சிறுவர் இலக்கியங்கள் என்று எடுத்துக்கொண்டால் அதனை அன்ன காத் வெஸ்றலியின் (Anne - Cath Vestly) பெயரைத் தவிர்த்துப் பார்க்க முடியாது. மூன்று தலைமுறைச் சிறுவர்களின் அபிமானம் பெற்ற இவாது கதைகள் நூல் வடிவிலும், ஒலிநாடா வடிவிலும் மாத்திரமன்றி, மேடைகளில் நாடக வடிவாகவும் பார்க்கக் கிடைக்கின்றன. வெஸ்றலியின் படைப்புகள் இதுவரை 50க்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. நாற்பது லட்சம் மக்களை மாத்திரமே கொண்ட நோர்வேஜிய மொழியில் இத்தனை தொகையிலான சிறுவர் இலக்கியங்களை ஒருவர் தனியே எழுதியிருப்பது சாதனைதானே. (ஆறுகோடி தமிழர்களில் எத்தனை பேர் சிறுவர் நூல்களை எழுதுகிறார்கள் என்ற கேள்வி கவனத்திற்குரியது) இந்தச் சாதனையையையும், இவரது படைப்புகளையும் பாராட்டி நோர்வேக் கலாசாரத் திணைக்களம் அண்மையில் இவருக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தது. இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பரிசு இரண்டரைலட்சம் குறோணர்கள் பணப் பரிசிலையும் உள்ளடக்கியது.


கடந்த நாற்பது வருடங்களாகச் சிறுவர்களது வளர்ச்சியில் அன்ன காத் வெஸ்றலியின் படைப்புகள் பிரிக்கமுடியாத அம்சமாக விளங்கி வருகின்றன. இப்படைப்புகளுக்கு வழங்கப்படும் கௌர[illegible] தமிழிலும் இவ்வாறான சிறுவர் இலக்கியங்களைப் படைப்போருக்கு ஒரு தூண்டுதலாக இருக்[illegible]

www.tamilarangam.net

# புலம்பெயர்ந்த தமிழர் நலமாநாடு

## டிசம்பர் 18, 1994 திருச்சி, தமிழ்நாடு

**தொடர்புகளுக்கு: நிறப்பிரிகை, அ. பெ. எண்: 192, பாண்டிச்சேரி - 1.**



மைப்புக் குழு:

ன்குலாப், எஸ்.வி.ராசதுரை,
ர.கலயாணி, அரணமுறுவல்,
ஃவதாஸ், டி.என்.கோபாலன்,
ஞ்சைராசன், கோ.சுகுமாரன்,
றிஞ்சி, நிறப்பிரிகை ஆசிரியர் குழு.

பேரன்புக்குரிய

தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'நிறப்பிரிகை' காலாண்டிதழ் பற்றித் தாங்கள் நன்கறிந்திருப்பீர்கள். பல்வேறு இடதுசாரிக் கண்ணோட்டங்களுக்கும், பெண்ணிலைவாதம், சாதி ஒழிப்புக் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கும் இடமளித்தும், மனித உரிமைச் செயல்பாடுகளை ஊக்குவித்தும் வருகிற ஒரு காலாண்டிதழே 'நிறப்பிரிகை'. 'நிறப்பிரிகை' ஆசிரியர் குழுவும், தமிழ்நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள், அறிவாளிகள், தமிழறிஞர்கள், மனித உரிமை இயக்கத் தொண்டர்கள், பத்திரிகையாளர்கள், தலித் இயக்கச் செயல்வீரர்கள், பெண்ணிலைவாதிகள் முதலியோரும் முன்முயற்சி எடுத்து, 'புலம்பெயர்ந்த தமிழர் நலமாநாட்'டினை வரும் டிசம்பர் 18 அன்று திருச்சி நகரில் நடத்தவிருக்கின்றனர். எதிர்வரும் ஆண்டு ஜனவரி திங்களில் தஞ்சாவூரில் தமிழ்நாடு அரசாங்கம் நடத்தவுள்ள 'உலகத் தமிழ் மாநாடு' என்னும் வெற்றாரவார, வெற்றலங்கார வேடிக்கை விழா கோடிக்கான ரூபாய் செலவிட்டு நடக்கவிருக்கும் தருவாயில், தமிழ் பேசும் மக்களோடு தொடர்புடைய ஒரு முக்கிய பிரச்சனையை, தமிழ்நாட்டிலும் உலகின் பிற பகுதிகளிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் தெரிந்துகொள்ளச் செய்யும் வகையில் 'புலம்பெயர்ந்த தமிழர் மாநாடு' நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாநாடு, முதன்மையாக புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் எதிர்கொள்ளும் இன்னல்கள், பிரச்சனைகள் ஆகியவற்றுக்கே முதன்மை தரும்.

இம்மாநாட்டினையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றுள்ள ஈழத் தமிழர்களின் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும், அவர்கள் தம் மனித உரிமைகளையும் பண்பாட்டுத் தனித்தன்மையையும் காத்துக்கொள்ள மேற்கொண்டுவரும் முயற்சிகள் பற்றியும், ஈழத் தமிழ்ப் பெண்கள் முகங்கொடுக்க வேண்டிய தனிச்சிறப்பான பிரச்சனைகள் பற்றியும் எழுதப்படும் கட்டுரைகளை, நாங்கள் தங்களிடமிருந்தும், தங்கள் நண்பர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமிழர்கள் நடத்திவரும் பல்வேறு சஞ்சிகைகள் பற்றிய விபரங்களையும் (பெயர், மாதஇதழ்/காலாண்டிதழ், தினசரி) எங்களுக்கு அறியத்தருமாறு வேண்டுகிறோம்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் அனுபவங்களைச் சித்தரிக்கும் கவிதைகள், சிறுகதைகள் போன்ற படைப்பிலக்கியங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

'நிறப்பிரிகை' சார்பில் பல்வேறு தரப்பினரும் இணைந்து நடத்தும் மாநாடும் சரி, அது தொடர்பாகக் கொண்டுவரும் சிறப்பு மலரும் சரி, எந்தவொரு போராளிக் குழுவுக்கும் பக்கச் சார்பு காட்டாது.

தங்களது பங்களிப்பு (கட்டுரை, கதை, கவிதை, செய்தித் தொகுப்பு முதலியன) நவம்பர் 10ஆம் தேதிக்குள் 'நிறப்பிரிகை' அ.பெ.எண் 192, பாண்டிச்சேரி 1 (NIRAPPIRIKAI, POST BOX NO. 192, PONDICHERRY 605008) என்ற முகவரிக்கோ அல்லது S.V.RAJADURAI, B-1 PILLAR APARTMENT., 13-B, TENTH AVENUE, ASHOKNAGAR, MADRAS 600083 என்ற முகவரிக்கோ அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

எங்களது இம் முயற்சிக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பும் தேவை. மாநாட்டிற்குத் தாங்களோ பிற நண்பர்களோ வருவது எங்களுக்கு மிகவும் பெருமை தரும்.

தங்கள் அன்புள்ள
எஸ்.வி.ராஜதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

● சென்னையில் இருந்து அதியமான்

# தமிழகத் தபால்

## ஆங்கிலத் திணிப்பு

திராவிட இயக்கங்களுக்கு ஆங்கிலம் மீது எப்போதுமே தீராக் காதல் உண்டு. இருமொழிக் கொள்கை (ஆங்கிலம், தமிழ்) என்று பேசிப்பேசியே ஆங்கிலத்தை வளர்ப்பவர்கள் இவர்கள். தமிழை வளர்க்க எந்த நிலையிலும் இவர்கள் பாடுபடவில்லை என்பது நிதர்சனமான உண்மை. காங்கிரஸ்காரன் 38 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றிய தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் ஊறுகாய்ப் பானையில் ஊறப் போடப்பட்டு விட்டது. வரிந்துகட்டிக் கொண்டு ஆங்கிலத்துக்கு வால் பிடிக்கும் இவர்களுக்கு தமிழ்மொழி, அள்ள அள்ளக் குறையாத அளவுக்கு ஓட்டுகளைக் குவிக்கும் அமுதசுரபியாகும். சமீபத்தில் ஜெயலலிதா அரசு, "ஒவ்வொரு வாரமும் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் பள்ளிகளி மாணவர்கள் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்" என்று உத்தரவிட்டது. இதற்கு அரசு கூறிய காரணம் விந்தையானது: கிராமப்புறத்து மாணவர்கள் ஆங்கிலத்தில் ஃபெயில் ஆகிறார்கள். அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த ஆங்கிலம் தேவைப் படுகிறது என்ற பாணியில் அரசு விளக்கம் சொல்லியிருந்தது. தலைநகர்த் தமிழ்ச் சங்கம் இதற்குக் கடுமையான எதிர்ப்புத்





டாக்டர் ராமதாஸ் என்ன நினைக்கிறார் என்பது தெரியவில்லை.

இரண்டாவது, டாக்டர் ராமதாஸ் தீவிரமான புலிகள் ஆதரவாளர். ஆனால் கருணாநிதியோ, புலிகளுக்கு எதிராகப் பேசியும் எழுதியும் வருகிறார்.

மூன்றாவது, டாக்டர் ராமதாஸ் தமிழ்நாட்டில் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அதன் அடிப்படையிலேயே இட ஒதுக்கீடு அமையவேண்டும் என்றும் கூறுகிறார். ஆனால் ஆளுநர் பி.சி.அலெக்ஸாண்டரால்

www.tamilarangam.net

www.tamilarangam.net



தெரிவித்துப் போராட்டம் அறிவித்தது. தமிழ்நாடு அரசு ஒன்றும் தெரியாதது போல், "நாங்களா? எப்போது ஆங்கிலம் பேசச் சொன்னோம்" என்று அப்பாவித் தனமாக நடித்தது. தலைநகர்த் தமிழ்ச் சங்கம், ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப் பட்டிருந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் சுற்றறிக்கையை, ஆதாரத்துடன் வெளியிட்டவுடன், திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் கம்மென்று இருந்துவிட்டது ஜெ.அரசு. ஆனால் பத்துக்கும் மேற்பட்ட தமிழர் அமைப்புகள் போராட்டம் நடத்தின. தி.க, தி.மு.க, ம.தி.மு.க ஆகியன யார் வீட்டுக்கு வந்த விருந்தோ என்று வாழாயிருந்துவிட்டன. ஏறத்தாழ ஆறுபது ஆண்டுகாலமாக இந்தித் திணிப்பிற்கு எதிராகப் போராடிவரும் தமிழ் மக்கள், ஆங்கிலத் திணிப்பை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டதுதான், திராவிட இயக்கங்கள் செய்த மாபெரும் சாதனை (?) ஆகும்.

## தப்புக் கணக்கு

தமிழ்நாடு அரசியல் அரங்கில் கருணாநிதி, டாக்டர் ராம்தாஸ் கூட்டணி ஏற்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. சமீபத்தில் பிற்படுத்தப் பட்டோருக்கான 69 சதவீத இட ஒதுக்கீடு போராட்டத்தில் தி.மு.க.வும், பா.ம.க.வும் ஒன்றிணைந்து ஜெயலலிதாவுக்கு எதிராகப் போராடின. சிறையில் தி.மு.க. தலைவரின் உணவை டாக்டர் ராமதாஸ் பகிர்ந்துண்டார். உணவைப் பகிர்ந்து கொண்ட அவர்கள் தொகுதிகளையும் பகிர்ந்து கொள்வார்கள் என அப்போதே பத்திரிகையாளர்கள் கூறினர். இருந்தும் தி.மு.க, பா.ம.க கூட்டணி வருவதில் பல்வேறு கருத்து மோதல்கள் உள்ளன.

முதற் காரணம், பா.ம.க ஒரு தாழ்த்தப் பட்டவரை முதல்வராக்க வேண்டும்

என்கிறது. மேலும் சுழற்சி முறையில் ஐந்து ஆண்டுகளுக்கு, வருடத்துக்கு ஒரு முதல்வர் வீதம் ஐந்து சாதியைச் சேர்ந்தவர்கள் வரவேண்டும் என்றும் பா.ம.க. வலியுறுத்துகிறது. கருணாநிதி என்ன தாழ்த்தப் பட்டவரா? தான் இல்லாவிட்டாலும் தனக்குப் பிறகு தனது மகன் ஸ்டாலின் பதவிக்கு வரவேண்டும் என்று விரும்புவராயிற்றே அவர்! இதில் சாதிவாரிக் கணக்கெடுப்புக்காக நியமிக்கப்பட்ட வெங்கடகிருஷ்ணன் கமிட்டியை கலைத்தார் கருணாநிதி. இதை 1988 – 89ல் கடுமையாக எதிர்த்தவர் டாக்டர் ராம்தாஸ். இந்தமாதிரி பல்வேறு கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும் புலிகள் ஆதரவுதான், கருணாநிதிக்குச் சங்கடமான விடயமாக உள்ளது.

## மொஹமட் தார்வீஷ் கவிதைகள்!

பாலஸ்தீனக் கவிஞர் மொஹமட் தார்வீஷ் கவிதைகளை தமிழ் வாசகர்களுக்கு தமிழ்நாட்டில் அதிகளவில் அறிமுகப் படுத்தியவர் திரு எஸ்.வி.ஆர். இதே அளவுக்கு தார்வீஷ் கவிதைகளை மொழிபெயர்த்து, ஒரு போராட்ட இலக்கியத்தை யமுனா ராஜேந்திரனும் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. "25 கவிதைகளும் 500 கொமாண்டோக்களும்" என்ற பெயரில் தார்வீஷ் கவிதைகளை மொழிபெயர்த்து நூலுருவில் கொண்டுவந்துள்ளார் யமுனா ராஜேந்திரன். இதில் சி.சிவசேகரம் மொழிபெயர்த்த சில கவிதைகளும் அடக்கம். இவற்றில் சில சுவடுகளில் வெளியானவை. இந்தத் தொகுப்பின் உள்ள மொழிபெயர்ப்பின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆற்றலைக் கீழ்க்காணும் கவிதையே சுட்டிக் காட்டும் வல்லமை கொண்டது.

எனது சோகங்களை நான்
உணர்ந்திருக்கிறேன்
எனது பசியையும் அலைதலையும்
நான்
தழுவுகிறேன்

கோபம்
என் கைகளில் வாழ்கிறது
கோபம்
என் பேச்சில் வாழ்கிறது.

என் ரத்தத் துடிப்பில்
நீந்துகிறது கோபம்

ஹோ வாசகனே!

என்னிடம் விசும்பலை எதிர்பார்க்காதே
பரவசத்திலான
சொற்களை எதிர்பார்க்காதே

இது என் துயரம்

மணலில் முரட்டுத்தனமாக
ஒரு அடி
மேகத்தில் இன்னொடி அடி
கோபம்தான்
கோபம்தான் என் முழுமையும்.



உத்திகளை உருவாக்கிக் கொண்டவர் ஞாநி. இவரது இயக்கத்தில் இருக்கும் ஆளுமை, மேடையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் தேவையான ஒன்றாகும். தற்போது ஞாநி 'அரங்கம்' என்ற இருமாத நாடக இதழ் ஒன்றை வெளியிட்டுள்ளார். நாடகத்தின் எல்லாப் பகுதிகளையும்

செப்டம்பரில் ம.தி.மு.க. பிரமுகர் சுந்தரத்தின் வீட்டில் விஜயன் என்ற விடுதலைப்புலி தன்னைத்தானே சுட்டு மாய்த்துக் கொண்டார். ம.தி.மு.க.வை ஓரங்கட்டத் தருணம் பார்த்திருந்த கருணாநிதி, புலி எதிர்ப்புப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தி, "வை.கோபால்சாமி

www.tamilarangam.net

இந்தக் கவிதையில் வார்த்தை விளையாட்டு இல்லை. மொழியைக் கொண்டே வாசகனைப் பயமுறுத்தும் அறிவுஜீவித்தனம் இல்லை. கவிதை எளிமையாக, இயல்பாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள எல்லாக் கவிதைகளுமே பெரும்பாலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவைதான். கவிதையைப் புரிந்துகொள்ள முடியும் என்பதே பெரிய விஷயமாகிப் போய்விட்ட தமிழ்ச் சூழலில் இதுவொரு காலத்தின் தேவையாகும்.

(நூல் கிடைக்குமிடம்: ஸ்நேகா வெளியீட்டகம், 348 டி.டி.கே.சாலை (முதல் தளம்), சென்னை 14, பக்கம் 63, விலை ரூ.20.00)

ஞாநியின் அரங்கம்

தற்போது தமிழ்நாட்டில் நாடகம் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள், நடிக்கிறார்கள்! கோமல் சுவாமிநாதன் தனது சுபமங்களாவில் நாடகத்துக்குக் கொடுக்கிற முன்னுரிமை, நாடகமேடையை ஒரு விரிந்த தளத்துக்குக் கொண்டுசென்றுள்ளது. அத்துடன் நாடகம் பற்றிய புரிதல்கள் விரிவாக்கம் பெற்றுள்ளன. தமிழ் நாடகமேடையில் தனக்கென்று தனி பாணி மற்றும் மேடை உள்ளடக்கியும், மொழிபெயர்ப்பு நாடகங்களையும் கொண்டதாக இந்த இதழ் வெளிவருகிறது. அரங்கத்தை நாடகப் பிரியர் அரவணைத்துக் கொள்வர்.

கொள்கையற்ற கோபால்சாமி

வை.கோபால்சாமியை தி.மு.க. தலைவர் கருணாநிதி கட்சியை விட்டு நீக்கியபோது, அவருக்காகத் தீக்குளித்தவர்களும், அவரைத் தோளில் சுமந்து காப்பாற்றியவர்களும் தீவிர தமிழீழ ஆதரவை உயிர்நாடியாகக் கொண்டிருந்த இளைஞர்கள்தான். தமிழீழ விடுதலையை கருணாநிதி கொச்சைப் படுத்தி விட்டார் என்ற ஆவேசத்தில்தான், வை.கோ. பின்பு இளைஞர்கள் அணிவகுத்து நின்றனர். இதைப்பற்றி சோ, வெறிபிடித்த இளைஞர்கள் தி.மு.க.வில் இருந்து வெளியேறியது, அந்தக் கட்சிக்கு நல்லதுதான்" என்று எழுதினார். அந்தளவுக்கு தமிழீழ விடுதலையில் வேட்கை கொண்டிருந்த இளைஞர்கள்தான், வை.கோ.வின் ஈழ ஆதரவுச் செயற்பாடுகளால் ம.தி.மு.க.வில் சேர்ந்தனர். வை.கோ.வும் தமிழீழத்துக்கான அடையாளமாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். இந்த நிலையில் கடந்த

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்படுகிறார்" என்று நாள்தோறும்





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பேட்டிகளும், அறிக்கைகளும் கொடுத்தார். கருணாநிதியின் ஆதரவு பெற்ற சில பத்திரிகைகள் ம.தி.மு.க.வைத் தடைசெய்ய வேண்டும் என எழுதின. தினமணி "பயங்கரவாதிகளுடன் தனக்குள்ள தொடர்பை, வை.கோ. கைவிட்டுவிட்டு, இளைஞர்களுக்கு நல்ல பாதை காட்ட வேண்டும்" என்று எழுதியது. புலி எதிர்ப்புப் பிரசாரம் வலுவடைந்து வருவதற்கு முகம் கொடுக்க முடியாத கோபால்சாமி, "விடுதலைப் புலிகளை ஆதரிப்போரை கட்சியிலிருந்து தூக்கி எறிவேன்" என்று ஆவேசப்பட்டார். இதற்கும் ஒருபடி மேலே போய், ம.தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளர் ராதாகிருஷ்ணன், "விடுதலைப் புலி விஜயனுக்கு அடைக்கலம் கொடுத்த சுந்தரத்தை ஜாமீனில் வெளியே கொண்டுவர ம.தி.மு.க. முயலாது" என்று

காட்டிக் கொடுத்தார். இவ்வாறு தனக்கு இருந்த ஒரே ஒரு அடையாளமான தமிழீழ ஆதரவாளர் என்பதையும் இழந்துவிட்டு நிற்கும் வை.கோபாலசாமியைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது.

பின்குறிப்பு: தமிழீழ எண்ணங் கொண்ட இளைஞர்களை (பொறுப்புகளில் உள்ள) அழைத்து, "ஒன்று தி.க.வில் இருங்கள் அல்லது உங்கள் விருப்பம் போல புலி ஆதரவு வேலைகளைச் செய்யுங்கள். இரண்டிலொன்றை முடிவெடுத்துக் கூறுங்கள்" என்று கி.வீரமணி கூறி வருகிறாராம்.

"தமிழீழத்தை ஆதரித்ததனாலேயே பாதிப்புக்குள்ளானவர்கள் எங்களிடம் வரலாம். நாங்கள் அவர்களுக்கு அரசியல் மற்றும் சட்டப் பாதுகாப்பு வழங்கத் தயாராயிருக்கிறோம்" என்று கூறுகிறார் டாக்டர் ராம்தாஸ்.●

# வாசல் திண்ணையில்

● தமிழகத்தில் இருந்து
கேயார்

விசாரணையையோ எடுத்தால்தானே, அதுவும் கிடையாது. சும்மா பிடிச்சு உள்ள வைச்சிருக்கிறதாலை ஆருக்கு நட்டம் எண்டு உவையள் நினைக்கினமில்லைக் கண்டியோ"

"அதுவும் இல்லை, இதுவும் இல்லாமல் சும்மா அதுக்குள்ள அடைபட்டிருக்கிறதாலை தேவையில்லாத யோசனைகளும், விரக்தி மனப்பான்மையுமெல்லை பொடியளுக்கு

www.tamilarangam.net

www.tamilarangam.net

"அட சப்பையா அண்ணை வாங்கோ..... வாங்கோ.... எப்ப வந்தீங்க? உக்காருங்கோ.... என்ன திடீரெண்டு இந்தப் பக்கம் காத்தடிச்சிருக்கு?"

"என்ன செய்யிறது பொன்னையாண்ணை. என்ர பேரன் ஒருத்தன் இங்க வந்த இடத்திலை பொலிஸிலை பிடிபட்டு வேலூர் 'ஸ்பெஷல் காம்ப்'பிலை ஏதோ வைச்சிருக்கிறாங்கள் எண்டு கடிதம் போட்டான். அதுதான் அவனைப் பார்த்து என்ன ஏதென்று விசாரிச்சு வெளியே எடுத்திட்டுப் போகலாம் எண்டுதான வந்தனான்."

"அப்பிடியே விஷயம்? பெடியன் வந்து எவ்வளவு காலமாகுது?"

"உனகுத் தெரியும்தானே, ஊரிலை பெடியளைக் கண்டா ஆமிக்காரர் அள்ளிக் கொண்டு போயிடுவாங்க. இல்லையெண்டால் 'ஷெல்'லாலையோ 'பொம்மரா'லையோ அடிச்சுக் கொல்லுவாங்கள். அவங்களின் ஆக்கினை பொறுக்க மாட்டாமல்தான் இவனயாவது இந்தியாவுக்குப் போய் ஏதாவது படிச்சிக்கிடிச்சு முன்னேறட்டும் எண்டு அவனை காதிலை மூக்கிலை இகூந்ததை அடவி வைச்சு இங்க அனுப்பினாள் அவன்ர தாய். உவனும் வந்து ஒழுங்காத்தான் இங்க இருந்திருக்கிறான். மூணு வருஷத்துக்கு முன்னால ஆமிக்காரன் வீடுவீடா..... றோட்டு றோட்டா ஆள் பிடிக்கிறமாதிரி இங்கையும் பொலிஸ்காரங்கள் கண்டவன் நிண்டவனை

எல்லாம் பிடிச்சு உள்ள தள்ளியிருக்கிறாங்கள் கண்டியோ, அதில இவனும் தெரியாம மாட்டுப் பட்டிட்டான்"

"அப்ப ஏன் இவ்வளவு காலமும் விடாமல் வைச்சிருக்கிறாங்கள்"

"அதை ஏன் கேக்கிறாய். உவன் பிடிபட்டிருக்கிறது எங்களுக்குத் தெரியாது கண்டியோ. கையிலை காசு இருந்தவையெல்லாம் 'உள்ளதைப் பிடி

ஆளை விடு' எண்டு ஆளாளுக்குக் காசு குடுத்திட்டு ஊருக்கு வந்து சேர்ந்திட்டாங்கள். வநத்வனிலை ஒருத்தன் சொல்லித்தானே எங்களுக்குத் தெரியும், இவனும் உள்ள இருக்கிறான் எண்டு. இவன் பொடியனிட்டயும் கையிலை காசு இல்லைக் கண்டியோ, இருந்தும் உள்ளுக்குள்ள அங்க இங்க கடனைப்பட்டு 'பாஸ்போட், ரிக்கற்' எல்லாம் செய்து குடுத்திருக்கிறான். அப்படி இருந்தும்

அவனைப் போக விடுகினமில்லையாம். இதென்ன அநியாயம் கண்டியோ. ஆள் எண்ணிக்கைக்குப் பிடிச்சவங்கள் அவங்கள்மேல வழக்கையோ வரப்போகுது.

உதுகளைக் கொஞ்சம் இங்க உள்ள பெரறுப்பானவர்கள் சிந்தித்துப் பார்க்க வேணும் கண்டியோ. படிக்கிற வயதிலும், தொழில் செய்து குடும்பத்தைப் பாக்கிற வயதிலும், பென்சன் எடுக்கிற வயதிலும், பென்சன் எடுத்த வயதிலும், பெட்டையள் பெடியன்கள் எண்டு எதுவுமேயில்லாமல் ஏன், இதையெல்லாம்விட பால் குடிக்கிற பச்சைக் குழந்தைகூட உள்ள அடைபட்டிருக்கெண்டால் யோசித்துப் பாரன். ஆரிட்டச் சொல்லுறது நாங்கள். அது மட்டுமே, இலங்கையிலையிருந்து அரை வயிறு கால்வயிறு சாப்பிட்டு தினம்தினம் மருந்து மாத்திரை இல்லாமலும் சாகிறதைவிட ஊருக்குப் போயாவது ஆமிக்காரரிட்டை அடிபட்டுச் சாகலாம் எணட்ால் அதுக்கும் விடுமாப்போல இல்லையெண்டு பொடியங்கள் சொல்லுறாங்கள்.

இப்பிடி ஒண்டா.... ரெண்டா...... ஆயிரம் பேருக்கு மேல் வெளி உலகம் தெரியாத நிலைதான் கண்டியோ. எனக்கும் வந்த விசா முடியப் போகுது. எலலாம் அந்த ஆண்டவனிட்டைப் பாரத்தைப் போட்டிட்டு நானும் நாளைக்கு ஊருக்குப் போகவேணும். இல்லையெண்டா என்னையும் தூக்கி உள்ள போட்டிடுவாங்கள்"

"அப்ப நான் வாறன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இப்படித்தான் ஐரோப்பியப் பயங்கரவாதம்

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களுக்காகப் புலிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவந்த எல்லா ஐரோப்பியச் செய்திகளையும் மீறி, அண்மையில் புலிகளைத் தடை செய்யவேண்டும் என்று ஒரு குரல் எழுந்துள்ளது. இந்தக் குரல் ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கை வடிவில் கடந்த ஏப்ரல் மாதத்தில் வந்தது.

ஜாஸ் கவ்ரொன்ஸ்கி (Jas Gowronski) என்பவரால் ஐரோப்பியப் பாராளுமன்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை சில உண்மைகளதும், பல அபத்தங்களதும் தொகுப்பு. ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தின் பின்னணியில் எழுதப்பட்டது என்பதையும், கடந்த பத்து வருடங்களாகத் தமிழ் மக்கள் மீது அடாவடித்தனமான யுத்தம் ஒன்றை நிகழ்த்தும் அரசை நேச சக்தியாகக் கொள்ளுமாறும், அதன் அரசைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளைப் பேணவும் இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குமாறும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தைக் கோருகிறது என்பதில் இருந்தே எவரும் அந்த அறிக்கையின் 'மகத்துவத்'தை உணரலாம்.

அறிக்கையின் உள்ளடக்கங்கள் பல முக்கிய தகவல்களைத் தவிர்த்தே உள்ளன. அறிக்கை தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை மறுக்கும் விதத்தில் மட்டுமன்றி, தமிழ் மக்களது விடுதலைப் போரை நசிக்கும் விதத்திலும் உள்ளது. விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யவேண்டும் என்று சிபார்சு செய்யும் அறிக்கை, தமிழ் மக்களது உரிமைகளைத் திட்டவட்டமாக வரையறுப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசு மற்றும் அரசியற் கட்சிகள் பிரச்சனையை சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை நோக்கிய பேச்சுவார்த்தையால் மட்டுமே தீர்க்கலாம் எனக் கூறுகிறது.

இந்த அறிக்கையின் பின்னணியில் மனித உரிமைகளுக்கான (யாழ்) பல்கலைக்கழக ஆசிரியர்களது அறிக்கைகள் பயன்பட்டிருக்க இடமுண்டு. அறிக்கை, மனித உரிமைகளுக்கான (யாழ்) பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குத் தேவையான நிதி உதவி போன்றவற்றை அளிக்குமாறு கோருகிறது. முன்னர் ஒரு தடவை அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பு புலிகளுடன் இணைந்து இயங்குகிறது எனக் கொழும்பில் அறிவித்து, பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றில் கைவைக்கும் ஆபத்தான வேலையை இந்த அமைப்பு செய்திருந்தது. இப்போது இந்த அமைப்பின் அறிக்கை, விடுதலைக்கு எதிரான திசையில் இன்னொரு தடவை பாவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் குரலாக இனிவரும் காலங்களிலாவது இந்த அமைப்பின் அறிக்கைகள் தெளிவாக இருப்பது நல்லது. இல்லையேல் எதிரிகள் தமது நலன்களுக்கு எம்மைப் பலியிடுவது மிகச் சுலபமாகிவிடும்.

• மஹி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகுமாரன்

# சாதித்துக் காட்டுவாரா சந்திரிகா?



வானத்தில் அவ்வப்போது வால்வெள்ளிகள் தோன்றுவது போல் தமிழர்களது அரசியலிலும் நம்பிக்கை நட்சத்திரங்கள் தோன்றுவது வழக்கம். அண்மைக் காலமாகத் தமிழர்கள் அடிக்கடி நினைத்துக் கொள்ளும் இஷ்டதெய்வம் போல வந்து உதித்திருப்பவர் சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்கா.

சந்திரிகாவின் தலைமையிலான முன்னணி இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பது பல காரணங்களுக்காக (சில நியாயமான காரணங்கள் உட்பட) புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் பலரது கனவாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதைவிட ஈழத் தமிழர்களிடையே இருந்து வரும் செய்திப் பத்திரிகைகளும் 'சந்திரிகாத் தெய்வம்' வெல்வார், தமிழர்களை 'அசுரர்களி'டம் இருந்து காப்பார் என்று தோன்றும் விதத்தில் செய்திகளை வெளியிட்டன. சில பத்திரிகைகள் தமிழர்கள் சந்திரிகாவின் தலைமையிலான முன்னணிக்கே வாக்களிக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரின. 'வடக்கே ரயில் ஓடவேண்டுமா? எனக்கு வாக்களியுங்கள்' என்று இந்தக் கட்சி வேட்பாளர் ஒருவர் அறிவித்ததுதான் இதற்குக் காரணமோ தெரியாது. ஆனால் தண்டவாளங்கள் இல்லாத வடக்கில் ரயில் ஓட்டுவது என்பது தேர்தல் வண்டவாளம் மாத்திரமே என்பது பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தப் பத்திரிகைச் செய்திகளை வெளியிட்டவர்கள், தமிழர்கள் அதிகளவில் ஒரு சிங்களக் கட்சியை நம்பக் காரணமானார்கள் என்பதையும், சந்திரிகா ஒரு சமாதானப் புறா என்று வெளிநாடுகளில் நிலவும் அபிப்பிராயத்துக்குத் தமிழர்களும் சேர்ந்து தூபமிடக் காரணமானார்கள் என்பதையும்

www.tamilarangam.net

எவரும் கண்டுகொண்டதாகவோ கண்டித்ததாகவோ தெரியவில்லை.

சந்திரிகா எப்படிப் பட்டவர் என்பது வேறு, சந்திரிகா, தான் நினைத்ததை எல்லாம் செய்ய முடியுமா என்பது வேறு. தற்போதைய இலங்கை அரசியற் சூழலில் சந்திரிகாவுக்குச் சில அனுகூலமான விடயங்கள் உள்ளன. ஆனால் அவற்றை அவர் பாவிக்கும் விதத்தில்தான் அவரது அரசியல் சாணக்கியம் வெளிப்படுவதும், அவரது அரசியல் எதிர்காலம் காப்பாற்றப் படுவதும் தங்கியுள்ளது. தமிழர்களது உரிமைகள் எதையுமே தராத இந்திய இலங்கை ஒப்பந்தத்தில், தான் பின்னணியாக இருந்ததால் தனது அரசியல் எதிர்காலத்தையே இழந்தேன் என அண்மையில் காமினி திஸாநாயகா கூறியதுபோல் இன்னொரு சந்தர்ப்பத்தில் சந்திரிகா கூற நேரலாம். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

சந்திரிகா தனது கணவரது படுகொலைக்குப் பிறகு அதிகளவில் அரசியல் பேசாமலே இருந்து வந்தார். காலம் காயங்களை ஆற்றிய பிறகு அரசியலில் தீவிரப்பட்ட சந்திரிகா பல சிரமங்களை - தனது சகோதரர், தாய் என்போருடனான அதிகாரப் போட்டி உட்பட - எதிர்நோக்கிய பின்பே தன்னை ஓளரவு நிலைநிறுத்த முடிந்தது. மேல்மாகாணசபையில் ஆட்சியில் அமர்ந்து சலசலப்பை ஏற்படுத்தித் தொடர்ந்து வரவுள்ள பொதுத் தேர்தலில் தனது தலைமையை நிறுவத் தருணம் எதிர்பார்த்துக் காத்திருந்தார். இறுதிவரையில் அவரது அதிகாரத்திற்குக் கடும் போட்டி தாயிடமிருந்து வந்தபோதும், தாயின் சுகவீனம், சந்திரிகாவின் வளர்ந்துவரும் செல்வாக்கு என்பன சந்திரிகாவிற்குரிய அதிகாரங்களை ஈட்டித் தந்தது. சந்திரிகாவின் இந்த வெற்றிகளுக்கு அவரது திறமைகள் மட்டுமன்றி, கணவரைப் படுகொலையில் பறிகொடுத்தவர் என்ற அனுதாபமும் முக்கிய காரணமாக இருந்ததை மறுக்க முடியாது.

தெற்கில் பல லட்சக் கணக்கானோர் தமது நெருங்கிய உறவினர்களை - கணவனை, மகனை, தந்தையை என்று - இழந்தவர்கள். முக்கியமாக பிரேமதாசாவின் கொடுங்கோல் ஆட்சிக்குள் தமது கண்ணீர் பெருகக் கண்டவர்கள். தமது நெருங்கிய ஆண்களை இழந்த பெண்களின் கண்ணீர், அவர்களது நிலையிலேயே இருந்த சந்திரிகாவை நோக்கித் திசைதிரும்பியதில் வியப்பில்லை.

சந்திரிகாவின் வெற்றிக்கான காரணங்களில் ஐதேக அரசின் கடுமையான மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளும் ஓரளவு பங்கெடுத்தன. பல சாதாரண விவசாயிகள் தற்கொலை செய்யுமளவுக்கு நிலைமையை மோசமாக்கிய அரசு பதவியில் இருந்து நீங்கவேண்டும் எனக் கணிசமானோர் விரும்பியதில் நியாயம் இல்லாமல் இல்லை. இவ்வாறான காரணங்கள் வெறுப்பாக மாற்றப்படச் சில வருடங்கள் எடுக்கலாம். ஆனால் சந்திரிகாவினால் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்று நம்ப இடமில்லை. ஏனெனில் ஐதேக பின்பற்றிய அதே திறந்த பொருளாதாரக் கொள்கைகளையே தானும் பின்பற்றப் போவதாக அவரும் அறிவித்திருக்கிறார். எனவே மக்கள் எதிர்நோக்கிய அதே பிரச்சனைகள், இப்போ இல்லாவிட்டாலும் பின்பு எழுந்தே தீரும். சிங்கள மக்கள் தமது பொருளாதாரப் பிரச்சனைகளால் அவதியுறும்போது, அந்தப் பிரச்சனையை இனப் பிரச்சனையாக்கித் தமது லாபங்களைத் தேடுவதில் சிங்கள இனவாதிகள் எப்போதும் வெற்றியே கண்டுள்ளனர். அப்படியொரு நிலை இனித் தோன்றாது என்பதற்கு எவரும் உத்தரவாதம் தரமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை பெரிய கட்சிகள் அனைத்திலும் இனவாதிகள் கணிசமான பங்கு வகிக்கின்றனர். இவர்களால் எதனையும் செய்ய முடியாத சூழல் இப்போது நிலவலாம். ஆனால் எதிரெதிர் அணிகளில் இருந்தாலும், இனவாதத்தைப் பொறுத்தவரை இணைந்தோ, ஒருவருக்கொருவர் சளையா விதத்திலோ இவர்கள் நடந்ததைக் காலங் காலமாகக் கண்டிருக்கிறோம். இனவாதிகளின் கையை முற்றாகத் தறித்துவிடக்கூடிய ஆற்றலும், துணிச்சலும் படைத்தவரா சந்திரிகா என்பதை இப்போது எதிர்வுகூற முடியாவிட்டாலும் இனவாதிகள் தமது அரசியல் நோக்கங்களை அடையக் கீழ்த்தரமான முறையிலாவது முனையச் சந்தர்ப்பங்கள் உள்ளன.

இனவாதம் ஒரு புறமிருக்க, எப்போதும் தமிழர்களை எதிரிகளாகவே கணிப்பிடும் (கணிசமான) புத்தபிக்குகளின் குரல் சரியான அரசியற் தீர்வுக்குத் தடையாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அமைதி திரும்பவேண்டும் என்பது இவர்கள் ஓதும் வேதமாக இருப்பினும், அவர்களது பாணியில் அமைதி திரும்பல் என்பது தமிழர்களைப் பலியிடல் என்பதாகவே இருந்திருக்கிறது. இவர்கள் 'மனந்திருந்தி' அல்லது ஞானம் பெற்று வருவதற்கிடையில் இன்னும் பல இனக்கொலைகள் நிகழ்ந்து முடிந்துவிடலாம்.

பொதுவாக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் கூறுவோர், ராணுவத்தின் (அநியாய) உயிரிழப்பையே காரணமாகக் கூறுவர். (தமிழ், முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் படுவது பற்றி யாரும் கவலைப் படுவதில்லை) ஆனால் யுத்தம் நீடிப்பதை ராணுவ மேலிடம் விரும்புகிறது என்பது உண்மை. அது

## வாழ்த்துகிறோம்!

நோர்வேயில் அதிகளவில் தமிழர்கள் வந்து சேரமுன்பே தனது வேர்களை ஊன்றித் தலைநகரில் தமிழ்ப்பணி செய்துவரும் நோர்வே தமிழ்ச் சங்கம் தனது பதினைந்து வயதை அண்மையில் நிறைவு செய்தது. சங்கத்தின் பணிகள் தமிழ் மக்களுக்கு மேலும் பயன்தரும் வகையில் தொடர சுவடுகள் தனது வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.

மட்டுமல்ல, யுத்தம் நிறுத்தப் பட்டால் தற்போது ஒருலட்சத்தைத் தாண்டிவிட்ட படையினரை என்ன செய்வது என்ற தலையிடியும் சந்திரிகாவுக்கு இருக்கும்.

இப்படிப் பல காரணங்கள், இனப்பிரச்சனைக்குச் சந்திரிகா தீர்வு காண முடியாத வகையில் அமைந்துள்ளன. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலானது, தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பும், வடக்கு கிழக்கு நிபந்தனை இன்றிய இணைப்பும். இந்த மிகமிக முக்கியமானதும் அடிப்படை நிபந்தனை போன்றதுமான விடயங்களில் சந்திரிகாவின் கட்சிக்குள் மாத்திரமன்றி, எதிர்க்கட்சிக்குள்ளும் பலத்த எதிர்ப்பு நிலவுவது தெளிவு. இவற்றைத் தீர்க்காமல் தமிழ் மக்களது பிரச்சனையை அமைதியான வழியில் தீர்ப்பது நடக்காத காரியம் என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படியான பலத்த காரணங்கள் இருக்கையில் வெறுமனே, பேச்சுவார்த்தை நடக்கிறது இந்தமுறை சரிவரும் என்று கண்ணைமூடியபடி நம்பாமல் ஆகவேண்டிய காரியங்களைப் பார்ப்பது நலம்.

www.tamilarangam.net



● அருவசிருங்காரன்

# இன்னும் ஒரு அரசியற் படுகொலை

இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் மிக விரைவாக அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த பத்து வருடங்களில், இலங்கையின் அரசியலில் முக்கியமாக விளங்கிய பலர் திடீரென அடையாளமே இல்லாமல் அழிந்துபோய்விட்டார்கள்; இவர்களில் கடைசியாகச் சேர்ந்தவர் காமினி திஸாநாயகா.

அண்மையில் கொழும்பில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு ஒன்றில் அவரும், அவருடன் ஏறத்தாழ ஐம்பது பேரும் கொல்லப்பட்டனர். அவர், தற்கொலைப் படை ஒன்றைச் சேர்ந்த பெண் ஒருவரால் கொல்லப் பட்டிருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படுகிறது. அவரது கொலை பற்றிய தகவல்களைத் தருவோருக்கு ஐம்பதுலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஒருவரது மரணத்தில் மகிழ்வது நியாயமல்ல என்றாலும், காமினியின் மரணத்தில் கவலையுறத் தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை. மனித நாகரிக வரலாற்றில் மிக மோசமான செயலான யாழ் நூலக எரிப்புக்குக் காமினி பின்னால் நின்றுதவிய கதை புதிதல்ல. பின்பும், தமிழ் மக்களின் உயிர்நாடியைப் பிடித்துப் பதறவைத்த இந்திய இலங்கை ஒப்பந்த உருவாக்கத்திலும் காமினி முக்கியமானவர். இந்தக் காரணங்கள் மாத்திரமே காமினியைத் தமிழ் மக்கள் வாழ்வுக்காலத்தில் ஒரு போதும் மன்னிக்காமல் இருக்கப் போதுமானவை. தமிழ் மக்களின் எதிரி, தமிழ் மக்களின் நண்பனாக வேடம் பூணமுடியும் என்பதற்குக் காமினி ஒரு நல்ல சாட்சி.

பிரேமதாசாவின் ஆட்சிக்கு எதிராக மேட்டுக்குடியினரை ஜே.ஆர். அணிதிரட்டியபோது அந்த நடவடிக்கையின் முக்கிய கதாநாயகர்கள் காமினியும், லலித்தும். இன்று பிரேமதாசாவும் இல்லை. லலித்தும் இல்லை. காமினியும் இல்லை. தமது நலன்களுக்காகப் புதிய கட்சியை ஆரம்பித்துப் பிறகு வெட்கம் கெட்டுப் போய் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த காமினி இறந்தது இலங்கையின் எந்த இன மக்களுக்கும் கவலை தருவதாக இராது. பாராளுமன்றமே சுத்துமாத்துத்தான் என்றாலும், அந்தப் பாராளுமன்றத்தை நம்பிய அரசியல்க் கட்சிகளின் முக்கியஸ்தர்களில் பலருக்கு இருக்கும் கட்சி விசுவாசம்கூட இல்லாத தலைவராகவே காமினி திஸாநாயகா திகழ்ந்தார் என்பதே உண்மை.

காமினியின் மறைவு, இலங்கையிலும் பல ஆசிய நாடுகளிலும் நிகழும் விதவை அரசியல் நுழைவை ஏற்படுத்தியிருக்கிறது. காமினியின் அகால மரணம் ஏற்படுத்தக்கூடிய அனுதாப அலையை வாக்குகளாக அறுவடை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி இந்தவிதம் முயற்சி செய்கிறது. உண்மையில் பெண்களின் அரசியற் பங்களிப்பை உறுதி செய்வதாக இருப்பின் பொதுத் தேர்தலில் பாதி ஆசனங்களைப் பெண்களுக்கு வழங்கியிருக்கலாமே.

எல்லாமே சுத்துமாத்து!

வேறொன்றுமில்லை!!

www.tamilarangam.net

○ பிரதீப்

# தண்ணீர் தண்ணீர்



தண்ணீர் பிரச்சனை என்றதும் இந்தியாவின் நினைவுதான் எமக்கு உடனடியாக வரும். ஆனால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஒரு செய்தி உலக நாடுகள் பலவற்றை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஆம், அதிகமில்லை, இன்னும் 30 வருடங்களில் உலக சனத்தொகையில் 1/3 பகுதியில் மக்கள் தண்ணீர் பிரச்சனையால் செயலிழக்கவுள்ளனர். P.A.I (POPULATION ACTION INTERNATIONAL) என்ற ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கூறப்பட்ட செய்தி வெளியாகியுள்ளது. சுமார் 2024ம் ஆண்டளவில் சுமார் 330கோடி மக்கள் (தற்போதய சனத்தொகையில் 70%) போதியளவு தண்ணீர் இன்றிக் கடுமையான நெருக்கடி நிலையை எதிர்நோக்குவார்கள். இதே நிலைமை 1990இல் சுமார் 36கோடியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் வோஷிங்டனில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த P.A.I. அமைப்பு இப்பிரச்சனைக்கு உடனடிப் பரிகாரமும் நீண்டகாலச் செயற் திட்டங்களும் இப்போதே ஆரம்பிக்கப் படாவிட்டால் கோடிக் கணக்கான மக்கள் தண்ணீரின்றி உயிரிழப்பதைத் தவிர்க்க முடியாததாக இருக்கும் என எச்சரித்துள்ளது. சுற்றுப்புறச் சூழல் வேகமாக மாசடைந்தும், இயற்கைச் சூழலின் மீது மனிதன் மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பும் நாம் வாழும் இப்பூமித்தாய் ஒவ்வொரு நிமிடமும் மாசடைந்து வருகின்றதை மனிதன் உணருவதில்லை. மனிதனின் இத்தகைய அடாவடித்தனத்தால் கோடிக்கணக்கான மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதியுறுகின்றார்கள்.

www.tamilarangam.net

செக்கோஸ்லாவாக்கியா, இந்திய மேற்குக் கரைப்பிரதேசம் (பாலஸ்தீனம்) போன்ற நாடுகளில் தண்ணீர் ஊற்றுக்கள் பெருமளவில் பாதிப்புற்றுள்ளன. போலந்து போன்ற ஒரு நாட்டில் 0.5%மான குடிதண்ணீர்தான் சுகாதார பாதுகாப்பானது. 60% குடிதண்ணீர் சுத்திகரிக்கப் படாதது. இவை தொழிற்சாலைப் பாவனைக்குக் கூட உகந்ததல்ல. ஐ.நா. சபையின் சூழல் பாதுகாப்பு நிலையத்தின் கருத்துப்படி கடலரிப்பு என்பது வேகமாக நிகழ்ந்து வரும் விடயமாகும். இன்னும் சில வருடங்களில் நீரில் உப்புத்தன்மையின் அளவு கணிசமான அளவு அதிகரித்து விடுவதுடன், நீரூற்றுக்களில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும் என தெரிவித்துள்ளது. P.A.I. வெளியிட்டுள்ள தகவலின்படி உலகில் வருடாந்தம் நோயால் பாதிக்கப்படுபவர்களில் 50%மானோர் சுத்தமான தண்ணீரின்றியே நோயுறுகின்றனர். சுமார் 40 லட்சம் குழந்தைகள் (சுத்தமான நீர் பற்றாக்குறையால்) வயிற்றோட்டத்தால் இறக்கின்றனர் என தெரிவித்துள்ளது. ஆபிரிக்காவின் கடும் வரட்சியும் மத்திய கிழக்கில் நிலவும் கடும் வெப்பமும் மட்டுமன்றி நீர்மட்டத்திற்குக் கீழேயுள்ள நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளிலும் தண்ணீர்ப் பிரச்சனை ஒரு பாரிய பிரச்சனையாக எதிர்காலத்தில் தலையெடுக்கவுள்ளது. மேலும் கிழக்கைரோப்பாவின் ஒரு பகுதியும், ஆசியாவும் (குறிப்பாக சீனாவும் அதன் சுற்றுப்புறமும்) வேகமாக சிக்கலை எதிர்நோக்கிவரும் நாடுகளாகும். இந்நாடுகளில் தண்ணீர் ஊற்றுக்களின் அடிமட்டம் வருடாந்தம் ஒரு மீற்றர் என்றளவில் குறைந்து வருகின்றது. இந்நிலை அமெரிக்காவையும் விட்டு வைக்கவில்லை. அமெரிக்காவின் பல குடியரசுகளில் சுத்தமான குடி தண்ணீர் விற்பனைக்குரிய அன்றாட பாவனைப் பொருட்களில் ஒன்றாக மாறியுள்ளதை அவதானிக்கலாம்.


தண்ணீர்ப் பிரச்சனை இன்றைய நவீன(?) உலகில் மிக முக்கிய பிரச்சனையாகக் கருதப்படுகின்றது. இந்தியாவில் காவிரி நீர் பிரச்சனை, கங்கை நீர் பிரச்சனை போன்றே உலகில் பல நாடுகளில் தண்ணீர் பங்கீட்டுப் பிரச்சனை மிக முக்கிய பிரச்சனையாகும். மத்திய கிழக்கில் தீராத பிரச்சனையாக இருந்து வரும் தண்ணீர்ப் பிரச்சனை அரசியல் சமூகப் பிரச்சனையாக மட்டுமன்றி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாகவும் மாறியுள்ளது. உலகப் பரப்பில் நீர்ப் பரப்பினளவு அதிகமாய் இருந்தும் சுத்தமான குடிதண்ணீர்ப் பிரச்சனை மிகப் பெரிய பிரச்சனையாக வளர்ந்து வருகின்றது. இதனை நிவர்த்தி செய்யு சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதும் விஞ்ஞான முன் முயற்சிகளையும் மேற்கொள்ளுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இயற்கையின் மீது மனிதன் மேற்கொண்டு வரும் மிருகத்தனமான தாக்குதலையும் நிறுத்துவதுமாகும்.




www.tamilarangam.net

அப்பளா, பாராளுமன்றத்துக்குள் தீர்வும் வேணும், அதை இடைக்காலத் தீர்வென்று எல்லோரும் நம்பவும் வேண்டும். இன்றைய சமூக அமைப்பு அழியவும் கூடாது, இதற்குள்ளேயே தேசிய விடுதலையும் வேண்டும். இப்படி ஏகப்பட்ட 'வொள்ளுகள்' விட்டிருக்கிறீர்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக நிலாக்காட்டும் புரட்டல், திரிபுவாதிகளது எக்காளத்தைக் கேட்டுக்கேட்டுக் காதுகளே புளித்துப் போய்விட்டன. 50 வருடகால






பகிரங்கக்
கடிதத்
தொடர்

உண்மைகளை மூடிமறைத்து நவநாகரிக கோமாளித்தனம் பண்ணும் இவர்கள் மாக்சிசத்தின் மீது தினம்தினம் ஓங்காளித்து வருகிறார்கள். இவர்களின் வரிசையில் அன்றே மாக்சிசத்தால் தூக்கி வீசப்பட்ட பழதுகளை நீயும் கந்தலானாலும் கசக்கிக் கட்டலாம் என வாயுபச்சாரம் செய்திருக்கிறாய்.

தேசியம் என்பது முதலாளித்துவ சந்தையின் விளைபொருள். இதை அதே சந்தைக்குள் பிரிவினையாகத்தான் அறுவடை செய்யமுடியும். எந்தவொரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தினது முதலாளி வர்க்கமும் தனது தேசிய சிறப்புரிமையோடு அதிகார வர்க்க உருவாக்கம் பெறுவதையே விரும்புகிறது. இதற்காகப் போரும் செய்கிறது. சுதந்திரம் அடையும் தனது சொந்தத் தேசத்திற்குள் (தேசிய சமூகத்திற்குள்) தொழிலாளி, விவசாயிகளைச் சுரண்டிக் கொழுப்பதை அடிப்படையாகக் கொண்டே 'சுயநிர்ணயத்'தை அது போதிக்கிறது. இந்த அடிப்படை மாக்சிச உண்மைகளை கடந்த 50 ஆண்டுகால சோடிணைகளால் மறைத்துவிட முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

அன்று சோவியத்தில் தேசிய இனப் பிரச்சனை எழுந்ததே முதலாளித்துவ சோவியத்தில்தான். அங்கு பெரும் தேசியத்தின் முதலாளித்துவம் அரசில் இருந்தது. அது ஏனைய தேசிய இனங்களின் சிறப்புரிமையை மறுத்தது. அனைத்துத் தேசிய இனங்களும் தத்தமது அரசுகளுக்குரிய கௌரவம்மிக்க பிரஜைகள் என்பதை மாக்சிசம் அங்கீகரித்தது. அது தேசிய சிறப்புரிமை/ தேசிய விடுதலையின் முன்நிபந்தனையை வழங்கியதன் ஊடாக சர்வதேசியத்தைக் கட்டியது. ஆனால் சோவியத் முதலாளித்துவத்திற்குத் திருப்பப் பட்டதும் சர்வதேசியம் உடைத்தெறியப் பட்டது. (இதைப் படிப்படியாகவே செய்தனர்) சர்வதேசியம் உடைந்ததும் சோவியத் சிதறுதேங்காய் ஆனது. சோவியத் பதினாறு துண்டுகளாக அறுவடை செய்யப் பட்டது.

பல்தேசிய சோவியத் அரசு சமூகத்திற்கு பொதுமைப் படுத்திய ஒரு தேசிய அரசை யாராலும் முன்வைக்க முடியவில்லை. முதலாளித்துவ சமூகத்திற்குள் தேசிய இனப்பிரச்சனைக்கு மாக்சிசம் தீர்வு வைக்கத் தவறிவிட்டது என வாய்கூசாமல் ஊகக் கோட்பாட்டாளர்களோ முக்கி வருகிறார்கள். சிதறிவிட்ட இன்றைய சோவியத்தைக்கூட ஒட்டலும் பிரித்தலும் அதனதன் சுரண்டிக் கொழுக்கும் அடிப்படை ஆசைகளைமீறி நிகழ்த்த முடியாதவை என்பதை கனவில் எழும்பித் திரிபவர்களுக்குப் புரியாது. இன்று சூனியத்தில் தலைதூக்கி குளறித் திரியும் இவர்களுக்கு இசைவாக நீயும் மாக்சிசத்தின் மீது 'உவாக்' எடுத்துள்ளாய். இது உங்களது வம்ச (வர்க்க) வாந்தியே.

அப்பளா, இடைக்காலத் தீர்வைப்பற்றி நிறையவே பேசியுள்ளோம். 45 வருடகால பாலஸ்தீன மக்களின் வீரம் செறிந்த உரிமைப் போராட்டத்தின் மீது அரபாத் ரத்தத் துரோகம் செய்துவிட்ட கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நாம் நிறையப் பேசியுள்ளோம்.

RUSSISK VINTER




இடைக்காலம் என்பது ஏதோ ஒரு தீர்க்கமான காலத்தின் (இலக்கின்) இடைநிலைத் தீர்வாகும். அந்தத் தீர்க்கமான காலம் வர்க்க விடுதலையாகவோ, ஏன் தேசிய விடுதலையாகவோ இருக்கலாம். எதுவாக இருப்பினும் அந்தத் தீர்க்கமான காலம் சமூக மாற்றமே. ஏனெனில் காலனித்துவங்களுக்குத் தேசிய விடுதலை ஒரு விரும்பத்தக்க சமூக மாற்றமே. ஆனால் நீயோ காலனித்துவத்தில் தேசிய விடுதலை சமூக மாற்றமே இல்லையென ஒரேயடியாக மறுத்து வருகிறாய். இந்த இடத்தில் வெளிப்படையாகவும் மிகத் தெளிவாகவும் ஒன்றைக் கூறமுடியும்.


தேசிய விடுதலையின் முன்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத, சமூக மாற்றத்தின் உறவுகளைத் துண்டித்த, பாராளுமன்ற 'செற்அப்'களை இடைக்காலத் தீர்வு என்று சொல்லிப் பேய்க்காட்டுவதன் ஊடாக ஏகாதிபத்தியத்திற்கும், தரகு - நிலச்சுவாந்தார்களுக்கும் அந்தரங்கச் சேவகம் செய்யும் சுத்துமாத்துக் காரன் ஆகிவிட்டாய். 'பூட்டான்' முதல் அரசு - புலிகள் ஒப்பந்தம்வரை நீங்கள் விட்ட திருகுதாளங்களுக்குப் பெயரென்ன? உங்களின் வர்க்க பாஷையில் இதுகளுக்குப் பெயர் இடைக்காலத் தீர்வு.

www.tamilarangam.net

இதைவிட்டால் உங்களது வர்க்க நலனையும் மீறி எதுவும் உங்கள் நாவில் எடுபடாது.

தேசிய விடுதலை என்பது ஒற்றைத் தேசிய இனத்துக்கு (தேசிய சமூகம்) மட்டுமே சொந்தம். அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 'பிபிஸி தமிழோசை'க்கு வழங்கிய பேட்டியில் "தமிழீழமானது தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமானது" என ஒப்புக் கொண்டுள்ளார் (வீரகேசரி 18.09.94). தமிழீழம் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களுக்குச் சொந்தமானது. அது தேசிய விடுதலையைப் பெற்றுக்கொள்ள தேசிய சமூகமேயல்ல: ஓர் அரசு சமூகமே. ஒற்றைத் தேசிய இனமல்லாத அரசு சமூகத்திற்கு ஒரு தேசிய அரசு தீர்வாக அமையவே முடியாது. இதற்கு உங்களது 50 ஆண்டுகால சோவியத்தே நல்ல படிப்பினை. தமிழீழம் ஒரே வடிவில் தெரியும் பிரிக்க முடியாத இரண்டு தேசங்கள். இதற்குள் எந்தகவாரு தேசிய இனத்தினதும் தனித்துவமான தேசிய விடுதலை என்பது வெறும் கனவுகளே. இதைத் திரும்பத் திரும்பக் கூறத் தேவையில்லை. காலனித்துவம் என்பதால் மட்டுமல்ல, தமிழீழத்தின் இந்தச் சிக்கலான புவியியல் அமைப்பும் இதற்குள் வாழும் எந்தவொரு தேசிய இனத்தினதும் தேசிய விடுதலையை அதனதன் உழவர் பிரச்சனையின் 'கண்ணி'யாகவே பார்க்க முடியும். இங்கு தேசிய விடுதலையை வர்க்க விடுதலையில் இருந்து பிரித்துப் பார்க்கவே முடியாது. அவ்வாறு பார்ப்பதானால் பாசிசமும், ஆக்கிரமிப்புமே தமிழீழத்தில் மிஞ்சும். இவைகளை விலைகொடுத்து வாங்க உனக்குப் பிரியமென்றால் நான் என்ன சொல்ல.

அப்பளா, இந்த உலகமும் இதிலுள்ள எந்தப் பொருளுமே நிலையானது அல்ல. மனிதனது உயிரும் அவ்வாறானதே. மனிதன் தனது வாழ்வுக்காகவும், மற்றவர்களது வாழ்வுக்காகவும் போராட்டத்தில் ஈடுபடுகிறான். அவனது வாழ்வை நெருக்கும் சமூக அமைப்பையும் அதன் அரசையும் அவன் எதிர்க்கிறான். அதன் ராணுவத்தை லத்திகளை துப்பாக்கிகளை பீரங்கிகளை இராணுவச் சித்திரவதைகளை ஏன் தூக்குக் கயிற்றைக்கூட அவன் சந்திக்க எதிர்கொள்ளத் துணிந்துவிடுகிறான். இடைநடுவில் இதில் ஏதாவது ஒன்றை எதிர்கொள்ள முடியாத நெருடலுக்கு




உள்ளாகும்போதே ஒருவன் தன்னை மாய்த்துக் கொள்கிறான் என்றால்; அது அவனது பலவீனமே. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலளவு என்பார்கள். அப்படிப்பட்ட ஒருவன்மீது நெருங்கிக் கொண்டிருக்கும் எந்த வதைகளுமே அவனுக்குத் தூசு. அப்படிப்பட்ட புலிப் போராளிகள் தற்கொலை செய்துகொள்வதை என்னென்று சொல்ல? அப்பளா, நான் இங்கு விமர்சனம் செய்வது சயனைட்டுகளை அடையாளமிட்டபடி தொடரும் தற்கொலை மரணங்களையே (ஒருசில தற்கொடைகளையல்ல).

www.tamilarangam.net

இங்கு விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படும் போராளிகளின் திறமைகளையோ, போராட முன்வந்த அவர்களது வரவுகளையோ, அவர்களது விலைமதிக்க முடியாத உயிர்களையோ, நான் உதாசீனம் செய்துவிடவில்லை. எந்த நிமிடத்தில் இனி என்னால் போராட முடியாது என அவன் நினைக்கிறானோ அல்லது நெருக்குதலான வேதனைகளைத் தாங்கிக்கொள்ள முடியாதெனத் தன்னை மாய்க்கின்றானோ; அந்த எல்லையையும்; அந்த எல்லையில் எடுத்த முடிவையுமே விமர்சனத்துக்கு உள்ளாக்குகிறேன். நீயோ "வெளிநாடுகளில் இருந்துகொண்டு கோழிக்காலைச் சுவைத்துக் கொண்டு...." என்ற ஒரு அபத்தமான தொனியில் சயனைட் மரணத்தை அதன் யதார்த்தத்திற்கு மேலே தூக்கிப் புகழ்வதற்குச் சாதகமாக அவனது வெளிநாட்டு வாழ்நிலையைக் கேலி செய்துள்ளாய். இது சாவுக்குப் பயந்து ஓடி வந்தவர்களுக்கு சயனைட் மரணங்களை விமர்சனம் செய்ய என்ன 'லாயக்' இருக்கிறது என்று விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பிரசாரம் செய்வதைப் போலுள்ளது. உனது எண்ணத்தின்படி வாழ விரும்புகின்ற எவருமே சயனைட் மரணங்களை விமர்சிக்க முடியாது என்ற சுதந்திர மறுப்பையல்லவா செய்துவிட நினைக்கிறாய். வீரத்தையும்/ கோழைமையையும்; மனவுறுதியும் அந்த மனவுறுதியால் கிடைக்கப் பெறுகின்ற பெறுபேறுகளையும் கொண்டே பிரித்துவிட முடியும். எதிரியிடம் உயிரோடு சிக்கக்கூடாது என்கிற எல்லையில் மரணம் (தற்கொலை) வீரம் என்றால் - அந்த எல்லை பிழையானது. அந்த எல்லையை வகுப்பது கோழைத்தனமானது.

அப்பளா, எமது சமூகம் மரணத்தால் சாகடிக்கப்படக் கூடாது. அவர்கள் அந்த மரணத்தையும் எதிர்க்கும் வல்லமை கொண்டவர்களாக வளரவேண்டும். சாவையே வென்ற மக்களாக வாழவேண்டும் என்ற அடிப்படையிலேயே சயனைட் மரணங்களின் தொடர்ச்சி விமர்சிக்கப்பட வேண்டும்.

அப்பளா, "ஒரு தேசிய இனத்தின் தே.வி. போராட்டத்தில் போராடும் போராளிகளையும் அவர்களின் தலைமையையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்ப்பது நியாயமற்றது" என விடுதலைப் புலிகளின் வர்க்கத் தன்மையைக் கூறுமிடத்துக் கூறுகிறாய். போராளிகளை ஒரு தலைமை வழிநடத்துவது போல, போராளிகளையும் தலைமையையும் சேர்த்து ஒரு தத்துவமே வழிநடத்திச் செல்கிறது. இங்கே யுத்தம் என்பது ரத்தம் சிந்தும் அரசியல். அதற்கு ஒரே ஒரு வர்க்கத் தன்மை மட்டும்தான் உண்டு. தேசிய விடுதலையை விளங்காத போராளிகள் புலிகளுக்குள் இருக்கலாம். அவர்கள் அதை விளங்கி அதற்கான தத்துவத்துக்கு உழைக்கும்போது மட்டுமே அவர்களது வர்க்கத் தன்மையும் மாறும். நடைமுறையே வர்க்கத்துக்கும் உரைகல். நடைமுறைகள் மாறும்போது வர்க்கத் தன்மையும் வேறுபடும். நீ தேசிய விடுதலையை சமூக மாற்றம் இல்லை என்று இன்னொரு பார்வையையும், வர்க்கத் தன்மையையும் கொண்டிருக்கிறாய் அல்லவா, அப்படித்தான்.

ப்பிரியமுடன்,
ராமன்
15.10.94

## மனிதம்

*இருதிங்கள் இதழ். தொடர்புகள்:*
**Postfach 12,/ 3000 Bern 11/ SWITZERLAND**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வலதுசாரி எச்சரிக்கை

சாள்ஸ்.ஜெ

தீவிர வலதுசாரிக் கட்சியான '.:.போர்ஸா இத்தாலியா' கட்சி பாசிசக் கட்சியுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றி நீண்ட காலமாகிவிடவில்லை. இப்போது ஒஸத்திறியாவின் வலதுசாரிக் கட்சியான FPÄ அண்மையில் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் 22.6% வாக்குகளைப் பெற்று அந்நாட்டின் பலம் வாய்ந்த கட்சிகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. மிக நீண்டகாலம் ஆட்சியில் இருந்த சோசலிச ஜனநாயக, பழமைபேண் மக்கள் கட்சிகளின் கூட்டாட்சியே இப்போதும் நீடித்தாலும், அவர்கள் இம்முறை பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 12% குறைவாகவே உள்ளது. அண்மையில் நிகழ்ந்த பெல்ஜிய உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளும் வலடசாரிகள், தேசியவாதிகளின் ஆதரவு பெருகிவருவதையே காட்டுகிறது. பெல்ஜியத்தின் இரண்டாவது நகரான அன்ட்வேர்ப்பில் நிறவாதக் கட்சியொன்று (Vlaams Block) சுமார் மூன்றிலொரு பங்கு வாக்குகளைப் பெற்று அந்நகரின் பெரிய கட்சியாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட கட்சிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ அந்நாடுகளில் குடியேறிய வெளிநாட்டினருக்கு எதிர்ப்பான கொள்கைகளையே தமது முக்கிய ஆயுதமாகத் தேர்தல்களில் உபயோகித்து வருகின்றன. இதேபோன்ற நிலையை பிரிட்டன், ஜேர்மனி, ஹங்கேரி, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் காணமுடிகிறது.

இன்றையதைப் போன்ற பொருளாதார நெருக்கடிகளும், வேலையில்லாத் திண்டாட்டமுமே 1920 - 30களில் பாஸிஸ்ட்டுகளதும் நாஸிகளினதும் வளர்ச்சிக்கு ஐரோப்பாவில் காரணமாய்




அமைந்தன என்பதை எண்ணும் எவரும் தற்போதைய ஐரோப்பிய அரசியற் போக்குகளின் மாற்றங்களைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. இந்நிலையைப் புரிந்துகொண்ட பல சமூகவியலாளர்களும், அரசியல்வாதிகளும் பொதுமக்களுக்கு உணரவைக்க எடுக்கும் முயற்சிகள் பலனளிப்பதாகத் தெரியவில்லை. பல பிரபல அரசியல்வாதிகள், ஊழல்வாதிகளாக அடையாளம் காட்டப் பட்டிருப்பதும் இன்றைய சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிய அரசியல் முடிவுகள் எடுக்கப் படாதிருப்பதும் அரசியல்மீது மக்கள் நம்பிக்கையை இழக்கக் காரணமாகின்றன.

இவ்வாறான ஒரு சூழலில், சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு வந்த நாம் வாழவேண்டியிருக்கையில் எம்மைச் சுற்றி நிகழும் விரும்பத்தகாத மாற்றங்கள் சிவப்பு விளக்குகளாகத் தெரிகின்றன.

இதேவேளை ஸ்கன்டினேவிய நாடுகளின் அரசியற் காலநிலை வேறுபட்டிருப்பது ஒரு

www.tamilarangam.net



G. BASYROV

சிறிது ஆறுதலான விஷயம். நோர்வேத் தேர்தலில் முன்னேற்றக் கட்சி (Fremskrittsparti) கணிசமான ஆதரவை இழந்துவிட்டது தெரிந்தது. அதைத் தொடர்ந்து கடந்த புரட்டாதி மாதம் நிகழ்ந்த சுவீடன் தேர்தல்களில் நி டெமோகிறட்டி (Ny Demokrati) வெறும் 1.7% வாக்குகளையே பெற்றுப் பாராளுமன்றத்தைவிட்டே வெளியேற நேரிட்டுள்ளது ஒரு குறிப்பிடத் தக்க மாறுதல். (குறைந்தது 4% வாக்குகளைப் பெற்றாலே பாராளுமன்றத்தில் நுழையமுடியும்) ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே சுவீடனும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் (13%) திணறுகிறது. இச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டவருக்கு எதிரான கோஷங்களுடன் நிறவெறியைத் தூண்டிவிட்டு, இருவருடங்களின் முன் மூன்றாவது பெரிய கட்சியாகத் திகழ்ந்த நி டெமோகிறட்டி இப்போது அரசியல் அரங்கில் இருந்து வெளியேற்றப் பட்டிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதே.

ஆனால் (டென்மார்க் தவிர்ந்த) ஸ்கன்டினேவிய நாடுகளில் இப்போது சூடாக விவாதத்திற்கு உள்ளாகும் ஐரோப்பிய சமூக இணைவு விவகாரம், தரவுகள், புள்ளிவிவரங்கள், எதிர்வுகூறல்கள் என்பவற்றுடன் 'ஐரோப்பிய மக்கள்' என்ற அடையாளம் பற்றியும், இணைந்த வாழ்வு நன்மையா தீமையா என்பது பற்றியும் கருத்து மோதல்களை உருவாக்கியுள்ளது.

ஐரோப்பாவில் வேகமாகப் பரவிவரும் நிறவெறியை எதிர்த்து இணைந்த ஐரோப்பாவில் போராடுவது சுலபம் என இணைவுக்கு ஆதரவானோர் கூறுகின்றனர். ஏகாதிபத்திய முதலாளிகளின் கைகளில் ஐரோப்பாவை ஒப்படைப்பது, தத்தம் நாடுகளது பாராளுமன்றங்களின் முடிவெடுக்கும் உரிமையை, பிறசல்ஸ்ஸில் வீற்றிருக்கும் சிறிய குழுவொன்றிடம் ஒப்படைப்பது, வளர்ந்துவரும் மூன்றாம் உலக நாடுகளை நெருங்கவிடாமல் ஐரோப்பாவைச் சுற்றிவர செயற்கையான அரணொன்றை உருவாக்குவது போன்றவையே ஐரோப்பிய




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

சமூகத்தின் விளைவுகளாக இருக்குமெனக் குமுறுகின்றனர் எதிர்ப்பாளர்கள். இவ்வாறு பல வாதப் பிரதிவாதங்களும் சுவீடனையும் நோர்வேயையும் கலக்கி வருகின்றன.

எவ்வாறாயினும் இந்தத் தேர்தல்களில் ஜனநாயக ரீதியில பங்கெடுக்கப் பெரும்பாலும் குடிவந்தவர்களுக்கு இடமில்லை; முக்கியமாகப் பிரஜாவுரிமை பெறாதவர்களுக்கு இடமில்லை. ஆனால் இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் எங்களது எதிர்காலத்தை இந்தத் தேர்தல்கள் தீர்மானிக்கப் போகின்றன என்பதில் மாறுபட்ட கருத்துகட்கு இடமில்லை.

ஐரோப்பிய சமூகத்தின் பொதுச் சபையான ஸ்ட்றாஸ்புர்க் பாராளுமன்றத்தில் தீவிர வலதுசாரிகளின் தொகை அதிகம் இல்லை என்றாலும், கணிசமானது. ஆனால் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் 10%க்கும் குறைவானோரே ஜேர்மனியில் நாஸிக்கட்சி உறுப்பினராக இருந்தனர். அவர்களே அறுபதுலட்சம் யூதர்களை அழித்ததை மறந்துவிட முடியாது. இன்னைய ஐரோப்பிய பொருளாதாரப் பிரச்சனைகள் நீடிப்பின், இப்போது வளர்ந்துவரும் நிறவாதக் கட்சிகள் ஸ்கன்டினேவிய நாடுகளிலும் தமது நச்சுப் போதனைகளைப் பரப்பாது என்றோ,






ஆதரவாளர்களைப் பெருக்கிக் கொள்ளாது என்றோ கூறமுடியுமா?

இவ்வாறான எதிர்காலம் பற்றிய கேள்விகள் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் எம்மவர் மத்தியில் விவாதிக்கப் படாமலிருப்பது கவலைக்குரியது. ஏற்கனவே ஈழ அகதிகளைத் திருப்பியனுப்பும் முடிவை எடுக்கும் நாடுகளில் அவற்றை எதிர்த்துப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதில், ஒற்றுமை இல்லாத தமிழர்களால் முடிவதில்லை. அது முடியாவிட்டாலும் குறிப்பிட்ட நாடுகளில் இருக்கும் அரசியற் கட்சிகளிலாவது சேர்ந்து அரசியல் முடிவுகளில் பங்கெடுக்க முயல்வதன் மூலம் எமது அடுத்த தலைமுறையாவது தமது வாழ்வு தொடர்பான முடிவுகளில் பங்கெடுக்க வழிசமைத்துக் கொடுப்பது புத்திசாலித்தனம். காசு சேர்ப்பது, வீடு வாங்குவது போன்றவை மட்டுமன்றி சமுதாயத்தில் தானும் ஒரு அங்கத்தினன் என்று உணர்ந்துகொண்டு பொது வாழ்க்கையிலும் ஈடுபட முயல்வது வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் எல்லோருக்கும் அவசியம். காலத்தின் கட்டாயம் இது.

www.tamilarangam.net

# உண்மையான உண்மை

புலவன்



உவன் என்னத்துக்கு அந்த விடியச் சாமத்தில ரெலி:.போன் பண்ணினவன்? சரி, பண்ணினாலும் பண்ணினான், ஏதாவது தன்ர விஷயங்களைக் கதைச்சதோட வைச்சிருக்கலாந்தானே?

உண்மை, கண்டறியாத உண்மை.

உண்மை, உண்மையெண்டா என்ன? ஏன் உண்மைக்கு நாங்கள் உண்மையாய் இருக்கோணும்.... பொய்யுக்கு உண்மையாய் இருந்தாலென்ன?....தேவையில்லாத விசாரணையள் தானே.

அவருக்கென்ன, விசாரிச்சுப் போட்டு நைசா வைச்சிட்டார். இப்ப நான் படுகிற பாடு, ஆண்டவா?

அடேய் ஆண்டவா! உண்மையெண்டா என்னடா?

இப்ப ரெண்டு கிழமையாய் இதை என்ர மண்டேக்க போட்டுக் குழப்பி, என்னோ சேந்ததுகள் நாலைஞ்சு அதுகளையும் குழப்பி, எல்லாமே குழம்பு குழம்பெண்டு குழம்பி விசர் பிடிச்சு அலையாத குறை.

ஒவ்வண்டும் ஒவ்வண்டைப் பாத்த உடன உண்மையெண்டா என்ன எண்ணுறதுகளும், உண்மையைப் பற்றித் துவங்கினால் முறைச்சுப் பாக்கிறதுகளும், சிலதுகள் கண்ட உடனயே உந்தா உண்மை வருது அறுக்கப் போகுது எண்டு மாறுறதுகளுமாய் பரிசில ஒரு

சேந்ததுகள்ள ஒண்டு சொல்லுது, உண்மையெண்டது அப்பிடியொண்டே இல்லையெண்டு. இன்னொண்டு சொல்லுது, உண்மையெண்டது எப்பவும் மாறிக்கொண்டே இருக்கும் இது இலக்கியம் எண்டு. இன்னொண்டு கதைக்கத் தொடங்கின உடன,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி பெரிய அல்லோல கல்லோலப்படுது.

இதுக்குள்ள என்னொரு பரதேசி, அவன்ர கதை வந்த புத்தகத்தைக் கொண்டு போட்டுது. இனி அவன் அடுத்த முறை ரெலி:.போன் பண்ணேக்க கதை வாசிச்சியோடா எண்டு கேட்டா நான் என்னத்தச் சொல்லுவன். இந்தப் பரதேசியள் இப்படித்தான். புத்தகங்களைக் கொண்டு போனால் கொண்டு வராதுகள். ஒண்டுமாறி ஒண்டுமாறியெண்டு அது சுத்தித் திரியும்.

அது இனி வராது, வரவே வராது, நாசமாய்ப்போக.

எனக்குப் பிடிச்ச விசர், போதாக் குறைக்கு இந்த நேரத்தில நான் இன்னுமொரு புத்தகத்தையும் வாசிச்சதுதான். எஸ்.வி.ராசதுரையின்ர "ரஷ்யப் புரட்சி இலக்கிய சாட்சியம்" நல்லதொரு இலக்கியப் புத்தகம். என்ர வெறுமண்டேக்க கனகன புது விஷயமெல்லாம் ஏறிச்சு.

ரஷ்யாவின்ர ஸ்ராலின் காலம், குருஷேவ் காலம், பிரஷ்நேவ் காலம், கோபர்ச்சேவ் காலம் எண்டு இந்தக் காலங்கள் பற்றின ஆய்வு, அதுக்கும் மேலால அந்தக் காலத்தில வாழ்ந்த சோவியத் இலக்கியவாதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய நெஞ்சைத் தொடுகிற குறிப்புகள்.

ஸ்ராலின் காலத்தில எத்தின எழுத்தாளர்கள் கொல்லப் பட்டிருக்கினம். எத்தின பேர் நாட்டைவிட்டுத் துரத்தியடிக்கப் பட்டிருக்கினம். எத்தினை பேர் கட்டாய உழைப்புக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கினம்.

ஸ்ராலினைப் பற்றி இருந்த கனவெல்லாம் பொடிப்பொடியாய்....

எண்டாலும் ஸ்ராலினை விட்டுக் குடுக்க முடியேல்ல.

ஒருவேளை எஸ்.வி.ஆர்., ஒரு பக்கச் செய்தியளை மட்டும் குடுத்து சிலபேர் அவரைச் சொல்றது போல திரிக்கிறாரோ?

சீ.. அந்தாள் புத்தகத்தில கனவிஷயங்களைச் சரியாத் தானே அணுகியிருக்கு. அப்ப ஸ்ராலின்..?

ஸ்ராலினும் எங்கட இயக்கமும் ஒண்டோ?

ஸ்ராலின் சரியெண்டா எங்கட இயக்கமும் சரிதானே?

ஸ்ராலின் 1940ல றொக்சியைக் கொண்டது சரியெண்டா 1994ல எங்கட பகுதியள்ள நடக்கிற கொலையளை நாங்களேன் பிளையெண்றம்.

எனக்கு எல்லாம் குழம்பி அடிஅடியெண்டு அடிச்சு ரெண்டு கிழமையா நித்திரையில்லாமல் ஓடித்திரிஞ்சன்.

புடிச்சுக்கொண்டே ஒரு இடத்தில தள்ளிவைச்சுப்போட்டு நீ ஆன்மிகவாதி மாக்ஸிச விரோதி எண்ணுது. இன்னொண்டு கொடுப்புக்க சிரிக்குது. இன்னொண்டு தூஷணத்தால பேசிப்போட்டுப் போகுது. ஐயோ! மண்டை மண்டையெண்டு அடிச்சாலும் ஆறாது. இப்ப மட்டும் அவன் முன்னால நிக்கோணும்....

இந்தக் குழப்பங்களுக் கெல்லாம் பிறகு உண்மையெண்டா என்னெண்டு ஒரு முடிவுக்கு வந்தன். உண்மையெண்றது அவரவர் சார்ந்த நிலை. அந்த உண்மை கட்டாயம் உண்மையான உண்மையா இருக்கோணுமெண்டில்ல. என்னுடைய உண்மை இன்னொருத்தருக்குப் பொய்யா இருக்கலாம். இன்னொருத்தருடைய உண்மை எனக்குப் பொய்யா இருக்கலாம். இது எங்கட அறிவு நிலை சார்ந்த பிரச்சனை. எங்கட அறிவுத்தளம் மாற மாற எங்கட உண்மையளும் மாறிக்கொண்டே இருக்கும். ஆனா 'உண்மையான' உண்மை எண்டைக்கும் மாறாது. இந்த உண்மைத் தேடல் தான் உண்மையான வாழ்க்கை. எங்கட உண்மையானது எங்கட அறிவு நிலை சார்ந்த பிரச்சனையா இருக்கேக்க நாங்கள் தான் உண்மையான உண்மை எண்டு அடம் பிடிக்கிறது அநியாயம். இதை நான் 'மக்ஸிமம்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னால முடிஞ்சவரைக்கும் ஒவ்வொருத்தருக்கும் விளங்கப் படுத்திப் பார்த்தன். ஒருத்தனும் விளங்கிக் கொள்றானில்ல. சாதாரண ஒரு சின்ன விஷயத்தைக் கதைக்கப்போக அவங்கள் பெரிசுபெரிசாக் கற்பனை பண்ணிக் கொண்டு, இது இலக்கியத்திற்கு எதிர், எப்பொருளும் எப்பவும் மாற்றமடையும், நீ முட்டாள் விசரன் என்கிறான்கள். எனக்கெண்டா விடமுடியேல்ல. ஆராவது ஒருத்தனுக்காவது இதை விளங்கப் படுத்தாட்டி எனர மண்டை சிதறும் போல கிடக்கு. எங்க உவன்?

எடேய்....!

இஞ்சேர், செல்லம் என்ர குஞ்செல்லே, இஞ்ச வாடி என்ர ராசாத்தி அச்சாக் குஞ்செல்லே உண்மையெண்டா என்னண?

"ம்!, மண்ணாங்கட்டி" ●




ஜீவிதன்

அவனின் மூளையைத் திருகி
குடிக்கத் தந்தான்
குமட்டக் குமட்டக் குடிக்கத் தந்தான்
வெறி ஏறிப் போனேன் நான்
வீங்கி.

புற்றாகி எழுந்தன விசப்பாம்புகள்
என் கையில் இருந்தும்
காலில் இருந்தும்.
கவிண்டு தொங்கியது
என்ரை மூளை
வெளவால் போல ஒற்றைக் காலில்
மேசையில் இருந்து நிலத்தைச் சாப்பிட்டேன்
குரைத்தன நாய்கள்
மூச்சு இளைத்துக் குரைத்தன நெடுக
ஒரு தரம்;
முஞ்சியைக் காலால் கிடாசியும் குரைத்தன
வாலைத் தெற்கால்
நீட்டியாட்டி.

கைகளை விரிக்கப் போகிறேன் நான்
புழுத்த விரல்களை உதறி
பொறுக்க வரும் வெள்ளைப் புறா
நான் பேய்க்காட்ட.
இனி நான்,
நிலத்தில் இருந்தே நிலத்தை உண்பேன்
என்னை ஒண்டும் பண்ண ஏலாது
எவரும்.

எங்கும் வியாபித்திருக்கும் என் ஏப்பக் காற்று
அடங்காது
அடங்கவே அடங்காது
என்ர பசியும் ருசியும் மலத்தையும் தின்னும்
தெரியுமா உங்களுக்கு?

• அகிலேகன்

# ஊர்வலம்



## மௌன கீதங்கள்

கடந்த முறை ரஜனியின் ஐரோப்பிய விஜயம் பற்றி எழுதி இருந்தன். பிறகு கிடைச்ச இரண்டு தகவல் திடுக்கிட வைக்கிறது.

ஒன்று: ரஜனியின் கலை நிகழ்ச்சியில் (சுவிஸ்) முதல் நாள் ஓரளவு சனம் மண்டபத்தடியில் கூடியிருந்தது. ஒரு சின்ன வானில 'சிலர்' வந்து தட புட என்று இறங்கி நாலாபக்கமும் நிண்ட ஆக்களைக் கண்காணித்தனராம். இதைக் கண்டு சனம் ஒண்டொண்டா கலைஞ்சு போய்விட்டார்களாம். பிறகு மறுநாளும் ஓரளவு சனம் மண்டபத்தில குவியத் தொடங்கியதும் அதே 'சிலர்' திடுதிப்பெண்டு வந்து குதித்திருக்கிறார்கள். இம்முறை கையில வீடியோக் கமரா இருந்துதாம். சனத்தை வீடியோ எடுக்கத் தொடங்க சனமும் ஒட்டமெட்டிக்காக் கலைஞ்சு போயிட்டுதாம். இதுபற்றிச் சனங்கள் சினிமாப் பாணியிலேயே சொல்லிக் கொண்டனராம். 'மௌன கீதங்கள்' என்று.

இரண்டு: இது இவ்வாறு இருக்க இதையடுத்து அருண்மொழியின் கலை நிகழ்ச்சி ஒன்று ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. ரஜனியினால் நட்டப்பட்ட இருவர் எடுத்த முயற்சி இது. இதற்கு ஓரளவு சனம் சமூகம் அளித்திருந்தது. இது நடைபெற்ற சில நாட்களில் இதை ஒழுங்கு செய்த இருவர் கடத்திச் செல்லப்பட்டுச் சித்திரவதையின் பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டதாக அறியப்படுகிறது.

www.tamilarangam.net

வெற்றுத் தாளில் கையொப்பம் வாங்கியதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

இது பற்றி சுவிஸ் நாட்டில் துண்டுப் பிரசுரம் அம்பலப்படுத்தி உரிமை கோராமல் வெளிவந்துள்ளது. அதைவிட அங்கு வெளிவரும் இலக்கியப் பத்திரிகை இச்சம்பவம் பற்றிக் கண்டித்து எழுதியுள்ளது. பின்னர் கிடைத்த தகவலின் படி அங்கு இயங்கும் தமிழ் அமைப்பு ஒன்று சுவிஸில் யாராவது கலைநிகழ்ச்சி ஏற்பாடு செய்வதானால் தம்மிடம் அனுமதி பெறவேண்டும் எனக் கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது பல சிறிய பெரிய அமைப்பினர், பாடசாலை நடத்துனர், கலை, இலக்கிய ஏற்பாட்டார் மத்தியில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எப்படி முகம் கொடுப்பது என்பது பற்றி பலரிடையே ரகசியப் பேச்சுக்கள் நடக்கின்றன. பலரும் வெளிப்படையாக இதை எதிர்க்க முன் வரவில்லை. "கலை வளர்ந்தால் என்ன கெட்டால் என்ன, நமக்கேன் வம்பு, புள்ள குட்டிக் காரன்" என்று கலைகள் பழக்கும் பாடசாலைக் காரர் ஒருவர் கூறுகின்றார்.

இது இன்னொரு ஐரோப்பிய நாட்டில் நடந்தது, ஏன் நோர்வே என்றே வைத்துக் கொள்ளுங்களேன்.

இங்கும் அடுத்தடுத்து இரண்டு இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஆயின் ஒரு கலை நிகழ்ச்சிக்கு ஒரு அமைப்பு பின் புலமாக நின்று ரகசிய பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாகப் பரவலாகக் கதைக்கப் பட்டது. இதுபற்றி யாரும் வெளிப்படையாகக் கதைக்கவில்லை.

இது பற்றி ஒரு முக்கிய 'சிந்தனையாளர்' கூறியது, "பகிஷ்கரிப்புப் பற்றித் தெரியாது. ஆனால் இந்தியக் கலைஞர்கள் பகிஷ்கரிப்புப் பற்றி எம்மிடையே, அமைப்புக்களிடையே சரியான தெளிவான நிலைப்பாடுகள் இல்லை.... அதுதான் கவலை தருவது" என்றார். "என்ன நிலைப்பாடுகள் இருக்க வேண்டும்" என்று வினவிய பிறகு அவரின் பதில், "வெறுமனே இந்திய எதிர்ப்பு எனும் அடிப்படையில் மட்டும் செய்வது சரியானது என்று படவில்லை. ஆனால் சீரழிவுக்கலை, சமூகத்தைக் கெடுக்கும் கலை, மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் கலை எனும் ரீதியில் இந்தப் பகிஷ்கரிப்பு இருந்தால் நல்லது, அதுவே ஆரோக்கியமானது!" என்றார்.

இன்னொரு சஞ்சிகைக் காரரிடம் கேட்டபோது அவர் முதலில் பதில் கூற மறுத்த போதும், துருவித் துருவிக் கேட்டதில் "பகிஷ்கரிப்பது ஒன்றும் கெட்ட விஷயமோ பாதகமான விஷயமோ அல்ல ஆனால்....இது பகிரங்கமாகச் செய்யப் படுவதே நல்லது, மக்களிடையே குழப்பம் வராது. தமிழ் அமைப்புக்கள் இதை ஏன் எதற்கு என்று தெளிவாக மக்கள் முன் வைப்பது அவசியமானது. சீரழிந்த கலாச்சாரம் சமூகத்திற்குக் கேடு விளைவிக்கும். நாம் ஜனநாயக ரீதியில் சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் எதிர்க்க வேண்டும்...." என்றார்.

இங்கு இரண்டு வெவ்வேறு கலைஞர்களின் நிகழ்ச்சி அடுத்தடுத்து நடந்துள்ளன. இதில் ஒன்று மட்டும் நிராகரிக்கப் பட்டதேன் என்று பல தமிழர்களிடையே கேள்வி உள்ளதை அவர்களிடம் அளவளாவிய போது தெரிகின்றது.

வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் கூறியது, "சரி இந்தியக் கலைஞர்களையோ, அந்தக் குப்பைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினிமாத் தனத்தையே நிராகரிக்கிறதெண்டால் நிராகரிக்கட்டும். அதாவது, வீடியோ சினிமா, சினிமாப் பாட்டுக் கசற், குப்பை இந்திய சஞ்சிகைகள், சினிமாப் புத்தகங்கள், இந்திய சினிமாவைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதும் எங்கட ஈழத்தவர் சஞ்சிகை எல்லாவற்றையும் நிராகரிக்கிறதுதானே நியாயம். அதை

விட்டுப் போட்டு வீடுகளில் முழுக்க முழுக்கச் சினிமாப் பாட்டும், வீடியோவும், உலகத்துக்கு ஒரு நியாயமும் என்று ஏன் இரட்டை நிலை?" என்று கோபமாக!

இந்தப் பகிஷ்கரிப்புக்குப் பின்னால் ஒரு 'அரசியல்' அமைப்பு நின்றாலும் துணைக்கு ஒரு 'பொது' அமைப்பின் 'சில' உறுப்பினர்களுக்கு மட்டும் ரகசியக் கூட்டம் வைத்து அவர்களையும் நிராகரிக்கக் கேட்டுக் கொண்டதாம்.

ஆனால் பாதிப்புற்ற 'பொது' அமைப்பு

நிர்வாகி தனக்குத் தெரியாமல் எதிர்வாதமா என்று இப்ப விலகிவிட்டாராம் என்று ஆதாரப்படுத்தி ஒரு ரஜனி ரசிகர் சொன்னார்.

விஷயம் 'லீக்' ஆனதை அறிந்த பல பிரமுகர்கள் இரண்டாவது தடவை நிகழ்ச்சியில் அப்படி அல்ல எனும் பாணியில் போய் நின்றனராம். இதனால் இவர்களின் சொல்லைக்

கேட்டு நிகழ்ச்சியைத் தவறவிட்ட ரசிகர்கள் சிலர் கொதித்துப் போய் உள்ளனர்.

மொத்தத்தில் எல்லோரின் குரலும் "எல்லாம் வெளிப்படையாகவே இருக்கட்டும், இது தான் அழகு" என்று தான்.



www.tamilarangam.net

# சீரழிவுக் கலாச்சாரம்

●சித்தன் சிவன்தேவி

பல நடப்புகளுக்கிடையில் அண்மைக்காலமாகப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே உலாவரும் செய்தி ஒன்று, இந்தியத் திரைப்படக் கலைஞர்களின் நிகழ்ச்சியைப் பகிஷ்கரிப்பது பற்றியது. ரஜனிகாந்தில் தொடங்கிய இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்ந்து வந்த வேறு சில கலைஞர்களது நிகழ்ச்சிகளையும் பகிஷ்கரிப்பதில் முடிந்திருக்கிறது. இந்தப் பகிஷ்கரிப்புகள் எவையும் தன்னெழுச்சியானவை அல்ல;

இதுவரை இந்த நிகழ்வுகளுக்குப் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படும் 'விடுதலைப் அமைப்பு' திரைப்படக் கலைஞர்கள் தொடர்பான எந்த நிகழ்ச்சியையும் பகிஷ்கரிக்குமாறான அறிவித்தலைப் பகிரங்கமாக விடவில்லை. தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்கள் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் மீதான பாசத்தின் காரணமாக வருவதில்லை என்பது ஒருபுறமிருக்க, அவர்களை வரவழைத்து நிகழ்ச்சிகளை நடத்தியதில் கடந்த காலங்களில் புலிகளுக்கும் பங்குண்டு. எனவே புலிகள் இந்தப் பகிஷ்கரிப்புப் பற்றிய அறிவிப்புகளை மறைமுகமாகவேனும் விடுவது சரியானதா என்ற கேள்வி எவருக்கும் எழலாம். இந்தப் பகிஷ்கரிப்புத் தூண்டலுக்கு ஏதுவான காரணங்கள் எவையாகவும் இருக்கலாம். ஆனால் இவை கலாச்சாரச் சீரழிவுக்கு எதிரானது என்ற வகையில் இந்தப் பகிஷ்கரிப்பு வரவேற்கப்பட வேண்டியது. ஆனால் பகிஷ்கரிப்பு மக்கள் தாமாக உணர்ந்து செய்யாதவரை அர்த்தமற்றதாகவே இருக்கும். தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் எந்த வகையிலும் தரமானவையோ பார்வையாளனது சிந்தனையை ஆரோக்கியமான திசையில் நடத்துவனவோ அல்ல என்ற உண்மையை மக்கள் உணராமல் பகிஷ்கரிப்புக்கு அவர்கள் தூண்டப்பட்டால் அல்லது நிர்ப்பந்தம் செய்யப் பட்டால், அதன் விளைவு ஆரோக்கியமானதாக இராது. இந்த நிகழ்ச்சிகள் தரமற்றவை; எமக்கும் எமது சிந்தனைக்கும் பயனற்றவை என்ற உண்மையை மக்கள் உணராவிட்டால் அவர்களது சினிமாக் கலைஞர்கள் மீதான; அந்த நிகழ்ச்சிகள் மீதான மோகம் எந்த விதத்திலும் குறையாது. மீண்டும் அந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும் ஆர்வம் மனதுள் இருந்தே தீரும்.

ரஜினிகாந்தின் நிகழ்ச்சியாயினும், ஏனைய திரைப்படக் கலைஞர்களது நிகழ்ச்சிகளாயினும் சாதாரண பார்வையாளனது சிந்தனையை நச்சாக்கும் தன்மை கொண்டவை என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமிராது. தாம் திரைப்படங்களில் காணும், கேட்கும் மனிதர்கள் உண்மையில் எப்படி இருப்பார்கள் என்று அறியும் சாதாரண மனிதனது ஆர்வத்தைக் காசாக்குவதன்றி இந்த நிகழ்ச்சிகளில் ஆரோக்கியமான விஷயம் எதுவும் கிடையாது. சில காலங்களுக்கு முன் இங்கு நிகழ்ந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் சிலுக்கு அரைகுறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடையுடன் மேடையில் தோன்றி ஆடினார். இந்த நிகழ்ச்சியை எந்தவித அருவருப்பும் இன்றிப் பெருந்தொகைப் பெண்கள் பார்த்தனர். மேடையில் ஆடுவது சிலுக்குத்தானே என்ற மனோபாவம் அந்தப் பெண்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் சிலுக்கும் தன்னைப்போல ஒரு பெண்தான் என்ற உணர்வோ, சிலுக்கு அவ்வாறு ஆடுவது எல்லாப் பெண்கள் மீதுமான அவமானம் என்ற உணர்வோ அந்த நிகழ்ச்சியைப் பார்த்த பெண்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பதிலாக, சிலுக்கு நல்ல வடிவு என்று பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இப்படிப் பெண்கள் இருப்பதற்கே சினிமா - தமிழ்ச் சினிமா - ஒரு முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

புலம்பெயர்ந்த பல ஈழத் தமிழர்களது தினசரி மன நெருக்கடிகளுக்கு வடிகாலாகத் தமிழ்த் திரைப் படங்களே உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தனை தொலைதூரம் வந்த பிறகும், இன்னொரு அந்நியச் சூழலில் வாழத் தொடங்கியபிறகும் எமது சிந்தனை வளராது சிக்குப் பிடித்துப் போயிருப்பதற்குக் காரணங்களில் ஒன்று தமிழ்ச் சினிமாக்கள் என்று கூறினால் யாரும் மறுக்க முடியாது. ஒரு விதத்தில் மன நெருக்கடிகளுக்கு வடிகாலாக உள்ள ஒரு சாதனம், மறுபுறத்தில் கலாச்சாரச் சீரழிவுக்கும், சிந்தனைத் தேக்கத்திற்கும் காரணமாக அமைகிறது. இதனை ஒத்தவையே இந்தியத் திரைப்படக் கலைஞர்களது நிகழ்ச்சிகளும். இந்நிலையில், திரைப்படக் கலைஞர்களது நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிக்க யாராவது விரும்பினால் அவற்றைப் பகிரங்கமாகச் செய்யலாம். அதுதான் நியாயமான வழியும்கூட. அப்போதுதான் இவற்றைப் பகிஷ்கரித்து, அதற்கு மாற்றான ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும் ஆர்வம் மக்களுக்கு இயல்பாக ஏற்படும்.

பலர் இந்தப் பகிஷ்கரிப்புப் பற்றிப் பின்வருமாறு கூறலாம்: "ஈழத் தமிழர்கள் சிரமப்பட்டு உழைக்கும் பணம் இந்த நிகழ்ச்சிகளின் ஊடாக இந்தியக் கலைஞர்களாற் சுரண்டப் படுகிறது" இந்த வாதத்தைச் சரியென எடுத்துக் கொண்டு இன்னொரு வாக்குமூலத்தைப் பார்ப்போம். "ரஜினியின் இந்தப் படத்தின் ஐரோப்பிய உரிமைக்கு நாங்கள் எழுபதுலட்சம் இந்திய ரூபாய்கள் கொடுக்க வேண்டியிருந்தது" சில காலங்களுக்கு முன் வெளிவந்த ஒரு தமிழ்த் திரைப்படத்தின் ஐரோப்பிய விநியோகஸ்தரது வாக்குமூலம் இது. இந்தியத் திரைப்படங்கள் வாராந்தம் திரையிடப்படும்போது, நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிக்கத் தூண்டியவர்களையும் திரையரங்கில் சந்திக்க முடிகிறது. இது என்ன முரண்பாடு என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

ஐரோப்பியத் தமிழர்கள் சுரண்டப் படுகிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் பார்த்தால், இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெரும்பாலானவை பகிஷ்கரிக்கப்பட வேண்டியவைதான். ஆகக் குறைந்தபட்சம் திரைப்படக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிக்கும் அதே காரணங்களுக்காக பொம்மை, பேசும் படம், ஜெமினி சினிமா போன்றவையாவது பகிஷ்கரிப்புக்கு உள்ளாக வேண்டியவைதான். ஆனால் எவரும் அப்படியான பகிஷ்கரிப்புப் பற்றிய செய்திகளைக் கேள்விப் பட்டதில்லை. அதைவிட, ஈழத் தமிழர்களது உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் செய்திகளையும், கருத்துகளையும் வெளிப்படுத்தும் பல சஞ்சிகைகளைக்கூடப் பகிஷ்கரிக்குமாறு எவரும் தூண்டவில்லை. அல்லது இவற்றைக் கண்டுகொள்வதில்லை.

இவற்றையெல்லாம் ஒரு கரையில் வைத்துவிட்டு, தமிழகத்தில் இருந்து இங்கு

www.tamilarangam.net

வருகிற சஞ்சிகைகளின் பட்டியலை எடுத்துப் பார்த்தால் அவற்றின் மிகப் பெரும்பகுதி சீரழிவுச் சஞ்சிகைகள்தான் என்பதைக் காணலாம். ஆனால் அவற்றின் மூலம் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் சுரண்டப் படுவது பற்றி யாரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. தரமான இலக்கியப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்கூடக் கிடைப்பது அரிதாகவே இருக்கிறது. இந்தச் சூழல் மாற்றப்பட வேண்டும் என்று யாரும் நினைத்தாலும் அது இலகுவில் நிகழ்ந்துவிடப் போவதில்லை.

நிகழ்ச்சிப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக வன்முறையிலும் புலிகள் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. அத்தனை தீவிரமாக இருக்கும் புலிகளுக்கு, நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிக்கத் தாமே தூண்டுகிறோம் என்று பகிரங்கமாக அறிவிக்கும் பொறுப்பு உண்டு. அதேவேளை, அவ்வாறான பகிஷ்கரிப்புக்குத் தாம் கற்பிக்கும் காரணம் என்ன என்பதைத் தெளிவுபடுத்தும் தார்மீகப் பொறுப்பும் உண்டு. அதேவேளை, இந்தியத் திரைப்படக் கலைஞர்களது நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிக்குமாறு ஏன் கூறுகிறார்களோ, அதே காரணங்கள் இந்தியத் திரைப்படங்களின் காட்சிக்கோ, அவற்றின் வீடியோ விநியோகத்திற்கோ, திரைப்படப் பாடல்களது பரவலுக்கோ, சீரழிவை வளர்க்கும் இந்தியப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கோ ஏன் பொருந்தாது என்று தெளிவுபடுத்தும் அவசியமும் உண்டு. அவ்வாறு பொருந்துமெனில் அவையும் விரைவில் 'பகிஷ்கரிக்கப்படுமா' என்பது பற்றியும் விளக்கம் தருவது நல்லது. முன்பு தாம் இந்தியத் திரைப்படக் கலைஞர்களது நிகழ்ச்சிகளை நடத்தியது தவறென்று இப்போது ஒப்புக் கொள்கிறார்களா என்பதையும், விடுதலைப் அமைப்பு 'சட்டங்களை' ஐரோப்பியத் தமிழர்கள் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறார்களா என்பதையும் தெளிவுபடுத்தினால் நலம். ஏனெனில் சுவிஸ் நிகழ்ச்சிகள் இந்தச் சந்தேகத்தைக் கிளப்புகின்றன.

அதேவேளை, இந்தியத் திரைப்படங்களாலோ, திரைப்படக் கலைஞர்களாலோ, இந்தியாவில் இருந்து வந்து குவியும் சஞ்சிகைகளாலோ எமது சந்ததிக்கு ஏதாவது நன்மை விளையும் என்று தவறாக நம்பாமல் 'நாமும் நமக்கென்றோர் நவியாக் கலையுடையோம்' என்று எமது மக்கள் தமது சிந்தனைப் போக்குகளை மாற்றிக் கொள்வது நல்லது என்பதை இந்த இடத்தில் தெளிவாகச் சொல்லிக் கொள்ள வேண்டும்●

## தடை

ஐரோப்பிய நாடுகளில் பாலியற் படங்கள், புத்தகங்கள், விபச்சாரம் போன்றவற்றிற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் நிலவும் சில நாடுகளில் நோர்வேயும் ஒன்று. நோர்வேயின் அயல் நாடான டென்மார்க்கில் அவ்வாறல்ல. எல்லாமே வெளிப்படைதான்.

டென்மார்க்கில் கடந்த வருடம் பாலியற் தொலைபேசிச் சேவைகள் 18கோடி 70லட்சம் குறோணர்கள் அதிகம் சம்பாதித்துள்ளது. பாலியல் புத்தகங்கள், சஞ்சிகைகளின் விற்பனை 20சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

www.tamilarangam.net

# அரசியற் தஞ்சமும் ஒரு கைதும்

• மனு



ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் ஒஸ்லோவில் உள்ள வீடு ஒன்றில் இரவு திடீரென ஆயுதந்தாங்கிய பொலிசார் நுழைந்து ஒரு அகதிப் பெண்ணைக் கைது செய்தனர். மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு நிகழ்ந்த இந்தக் கைது அடுத்த சில தினங்களில் பத்திரிகைகளில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் முக்கிய விடயமாக இருந்தது. சுஹைலியா ஸாமி அன்ட்ரூஸ் என்ற பெயருடன் நோர்வேயில் அகதியாக வசித்துவந்த அந்தப் பெண் 1977ல் நிகழ்ந்த ஒரு விமானக் கடத்தலில் நேரடியாக ஈடுபட்டமையே கைதுக்குக் காரணம்.

1991 முதல் நோர்வேயில் தனது கணவருடன் வசித்துவந்த இந்தப் பெண்ணின் கைது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. விமானக் கடத்தல் முறியடிக்கப்பட்ட போதே சுராயா அன்ஸாரி என்ற உண்மைப் பெயருள்ள இவர் தண்டனை அனுபவித்தவர். 1977 அக்டோபர் 13ம் திகதி மலோர்க்காவில் இருந்து பிராங்க்ஃபேர்ட் வந்த விமானம் ஆயுதந் தாங்கிய நான்கு பலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. இந்த விமானக் கடத்தல் சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் ஜேர்மன் படைகளால் முறியடிக்கப்பட்டது. அப்போது நிகழ்ந்த மோதலில் மூன்று தீவிரவாதிகள் பலியாக, உயிருடன் காயம்பட்டுத் தப்பிய சுராயா அன்ஸாரி அங்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டார்.

சிறைத் தண்டனை முடிந்து திருமணம் முடித்துத் தனது கணவருடன் வாழ்ந்துவந்த சுராயாவின் குடும்பம் மிரட்டலுக்கு உள்ளானது. இம்முறை மிரட்டலை மேற்கொண்டவர்கள் ஒரு பாலஸ்தீனத் தீவிரவாதக் குழுவினர். இவர்கள் இருவரும் இறுதியில் 1991ல் நோர்வே வந்து சேர்ந்தனர். கணவனின் பெயரிலேயே அகதி விண்ணப்பம் செய்யப் பட்டமையாலோ என்னவோ சுராயாவின் விமானக் கடத்தல் தொடர்புகள் பற்றிய சந்தேகம் எவருக்கும் எழவில்லை.

மூன்று வருடங்கள் அகதியாக நோர்வேயில் வாழ்ந்தபின்பு சர்வதேச ரீதியில் பணிகளை மேற்கொள்ளும் 'இன்ரபோல்' பொலிஸாரின் தகவல் அடிப்படையிலேயே சுராயா கைதானார். பல மாற்றுப் பெயர்களை ஏற்கனவே பாவித்த சுராயா நோர்வேயில் சுஹைலியா ஸாமி அன்ட்ரூஸ் என்ற பெயரிலேயே வசித்து வந்தார்.

சுராயாவின் கைது அரசியல் மட்டங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியின் வேண்டுகோளை ஏற்று அவரை ஜேர்மனியிடம் கையளிப்பதா இல்லையா என்ற கேள்வியே முக்கிய விவாதத்தைக் கிளறியுள்ளது. ஏற்கனவே அவர் தனது குற்றத்துக்குரிய தண்டனையை அனுபவித்துவிட்டதால் அவரைக் கையளிக்க வேண்டாம் என்று பல குரல்கள் எழுந்துள்ளன. இப்போது எங்கு அவர் சிறையில் வைக்கப் பட்டுள்ளார் என்பதைக்கூட அரசு வெளியிடவில்லை●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

## தாய்நாடு சேய்நாடு

ஈழத்தமிழர்களில் அனேகரிடம் இந்தியா (அல்லது தமிழகம்) தாய்நாடு. இலங்கை சேய்நாடு என்று ஒரு சிந்தனைப் போக்குப் பலமாக இருந்துவருகிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்லலாம். மொழி, கலாச்சாரம், கலை, இலக்கியம், அரசியல் என்பவற்றில் ஒற்றுமையும், இந்தியாவில் இருந்து இத்துறைகளில் அதன் செல்வாக்கும் ஒரு முக்கிய காரணம். தாய் சேய் என்ற எண்ணம் இந்திய உருவக்கத்தின் பின்பே (50களின் பின்) ஈழத்தில் பலம் பெற்றது. சினிமா, சஞ்சிகைகள் என்பனவும், திராவிட எழுச்சியும் மட்டுமல்ல, ஈழத் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையுமே அவர்களை இந்தியாவின்பால் தள்ளியது.

இவ்வாறு வளர்ந்த ஒரு கருத்துருவுக்கு, இந்தியப் படைகள், 87ல் ஈழத் தமிழர் மீது நடத்திய தாக்குதல் ஒரு பலத்த அடியாக இருந்தது.

இந்தியப் படைகளின் தமிழர்கள் மீதான தாக்குதலை வெறுமனே விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவிற்குமான போராகவோ முரண்பாடாகவோ மட்டுமே பார்க்கும் போக்குத் தவறானதாகும். 80களில் தமிழீழவிடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம் பெற்றபோது ஆயுதமும், பயிற்சியும் வழங்கியது இந்தியா. இதன்மூலம் தமிழர்களின் விடுதலைப் போரிலும், இலங்கையின் இறைமையிலும் முதன்முதலாக இந்தியா நேரடியாகத் தலையிட்டது. இந்த நடவடிக்கைகளில் இந்தியா தனது நலன்களை மாத்திரமே முதன்மையான அக்கறையாகக் கொண்டிருந்தது.

87ல் இந்தியப் படைகள் ஈழத்துக்கு அனுப்பப் பட்டதும் இந்திய இலங்கை ஒப்பந்தமும் இந்தியாவின் இன்னொரு அப்பட்டமான தலையீடாகும். இந்தியாவின் இறைமையில் தமிழர்கள் தலையிடுவதாக ராஜீவின் கொலையைக் காரணமாக வைத்து, அரசியற் தர்மங்களுக்கும், மனிதாபிமானத்துக்கும் முரணான வகையில் கடந்த சில வருடங்களாக நடந்து வந்துள்ளது. வடக்குத் தமிழர்கள் மீது பட்டினி வதையும், குண்டுவீச்சும் இலங்கை அரசால் நடத்தப்பட்டபோது இந்தியா கண்மூடி கைகட்டி நின்றது. ஆனால் இன்று சந்திரிகா அரசு இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் தொடங்கப் போவதாக அறிவித்தவுடன் மீண்டும் தனது மூக்கை இலங்கைக்குள் நுழைக்கத் தொடங்கியுள்ளது. இலங்கையில் தனது தூதராலயத்தில் பேச்சுவார்த்தைகளைக் 'கண்காணிக்க'த் தனிப்பிரிவு ஆரம்பிக்கப் பட்டதும், பேச்சுகளில் அரசு தலைப்பில் கலந்துகொள்ளும் லயனல் பெர்ணாண்டோவைப் பேச்சுகளுக்கு முன் அவசர அவசரமாக அழைத்துப் பேச்சுகள் நடத்தியமை என்பவற்றைக் கூறலாம்.

www.tamilarangam.net

தமிழகத் தமிழர்கள், உடன்பிறப்புகள் இந்தியாவின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளைக் கைகட்டிப் பார்த்திருப்பது கவலை தருவது. இதற்கு அப்பால் தமிழகப் பத்திரிகைகள், அரசியல்வாதிகள் ஈழத் தமிழர் பற்றி உண்மைக்கு விரோதமான கருத்துகளைப் பரப்பி வருவது கண்டும் அதை அம்பலப்படுத்தாததும், தமிழகத்தில் ஈழத்தமிழர் போதிய அடிப்படை வசதிகள் இல்லாது வாழ்கின்றபோதும் அதைக் கண்டும் காணாதிருப்பதும் தாய்நாடு - சேய்நாடு உறவு பற்றிப் பலத்த கேள்வி எழுப்புகிறது.

இந்திய இறைமையில் இலங்கை அரசோ, தமிழ் இயக்கங்களோ தலையிடுவது தவறெனில், ஈழத்தமிழரின் நியாயமான போராட்டத்தில் இந்தியா தலையிடுவதும் தவறாகாமல் இருக்க முடியாது.

## முஸ்லிம் சகோதரர்கள்

அண்மையில் இந்திய இதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் முஸ்லிம் மக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் கூறிய கருத்துகள் முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஓரளவு ஆறுதல் தந்துள்ளது. விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சனைகளில் தவறான அணுகுமுறையைக் கொண்டிருந்ததில் இருந்து அவர்கள் மாறுதல் அடைந்துள்ளமையையே இது காட்டுகிறது. கடந்த காலத் தவற்றை ஒத்துக் கொள்வது மாத்திரமன்றி, முஸ்லிம் மக்கள் எதிர்காலங்களில் அவர்களது சகல உரிமைகளையும் அனுபவிப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

சிறுபான்மை இனமான தமிழர்கள், இன்னொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களைக் கௌரவத்துடன் தமக்குரிய உரிமைகளை அவர்களுக்கும் கொடுத்து வாழவேண்டும் என இலங்கையிலுள்ள பல சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சிறுசஞ்சிகையாளர்கள், இலக்கியவாதிகள் கடுமையாகக் குரல் எழுப்பி வந்துள்ளனர். இவர்களின் நியாயத்திற்கான இந்தக் குரல் வெற்றியளித்துள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் விடுதலைப் புலிகளின் உள்ளேயும், வெளியேயும் உள்ள தமிழ் இனவாத சக்திகளுக்கு எதிராக உறுதியாகப் போராட வேண்டியிருக்கும் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளல் அவசியம். அதேவேளை முஸ்லிம் அடிப்படைவாதிகளின் தமிழ் விரோதப் போக்குகள் இனவாதத் தாக்குதல்கள் என்பவற்றுக்கு எதிராகவும் போராடவேண்டியிருக்கும்.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான அரசியல் முரண்பாடுகள், நிதானமானதும் நியாயமானதுமான ஜனநாயக வழிகளிலேயே இனிவரும் காலங்களில் அணுகப்படவேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒரு நியாயமான தீர்வு ஏற்படும்வரை, தமிழ் சிங்கள முஸ்லிம் இனவாதிகள் குழப்பம் ஏற்படுத்தத் தயாராகவே இருப்பர் என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். எந்தப் பிரச்சனையிலும் ஒரு தரப்பு மாத்திரமே சரியாக இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது தவறாகும்.

சுவடுகள் 59,
ஆடி 94
(ஐப்பசி இறுதியில் வெளியாகிறது)

'Suvadugal', Herslebs gt43, 0578 Oslo

www.tamilarangam.net




## பிளிட்ஸ் அமைப்புக்கு மாநகரசபையின் 'பரிசு'

இனவாதம், தீவிரத் தேசியவாதம் என்பவற்றுக்கு எதிராக உறுதியாகப் போராடும் வன்முறை கலந்த அமைப்பான 'பிளிட்ஸ்' (BLITZ) அண்மையில் ஒஸ்லோ மாநகரசபையின் கட்டிடமொன்றைக் குறைந்த வாடகைக்குப் பெற்றுள்ளது. வருடம் ஒன்றுக்கு ஐயாயிரம் குறோணர்கள் மாத்திரமே வாடகையாகப் பெறப்படவுள்ள இந்தக் கட்டிடத்தைக் கடந்த பன்னிரு வருடங்களாக பிளிட்ஸ் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமித்திருந்தது.

சில மாதங்களுக்குமுன் இந்தக் கட்டிடத்துக்குப் பெற்றோல் குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கட்டிடம் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது. நோர்வேஜிய ஓவிய மேதை எட்வார்ட் முங்க்கின் (Edward Munch) வதிவிடமாக ஒரு காலத்தில் இருந்த இந்தக் கட்டிடம் பிளிட்ஸ் அமைப்பினரது அலுவலகமாக, தங்குமிடமாக, கூடுமிடமாகப் பல வகைகளில் பயன்பட்டது. குண்டு வீசப்பட்ட பின்னர் கட்டிடத்தை என்ன செய்வது, யாரிடம் கையளிப்பது போன்ற விவாதங்கள் பரவலாக நிகழ்ந்தன. குண்டுவீசிய நபர்(கள்) இதுவரை கைதாகாத நிலையில் கட்டிடம் பற்றிய சர்ச்சையே மேலோங்கி நின்றது. இந்தச் சந்தாபபத்தைப் பயன்படுத்தி பிளிட்ஸ் அமைப்பினரைக் கட்டிடத்தில் இருந்து வெளியேற்றும் முயற்சிகள் நிகழ்ந்தாலும், இப்போது கட்டிடம் அவர்களிடமே கையளிக்கப்பட உள்ளது.

பிளிட்ஸ் அமைப்புக்கு இந்தக் கட்டிடத்தை இவ்வாறு குறைந்த வாடகைக்கு வழங்கியது பிழை என ஒஸ்லோ மாநகரசபையின் எதிர்க்கட்சிகள்

உரத்த குரல் எழுப்பின. கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்காக எதிர்வரும் ஐந்து வருடங்களில் செலவிடப்படவுள்ள பதினெட்டுலட்சம் குறோணர்களையும் மாநகரசபை பொறுப்பேற்றுள்ளமை இக்கட்சிகளை ஆத்திரமடையச் செய்துள்ளது. அடுத்த பத்து வருடங்களுக்குச் சட்டபூர்வமாக இந்தக் கட்டிடத்தில் குடியிருக்கும் உரிமையைப் பெற்ற பிளிட்ஸ் அமைப்பினர் தமது நடவடிக்கைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதைக் கருதினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

○சிவன்

www.tamilarangam.net

ஆசிரியர்,
சுவடுகள்.

இளைய அப்துல்லாவின் கடிதத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடுடையேன். எனது கட்டுரை தன்னுள் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று எழுதியிருந்தார். அதைத்தான் நானும் எதிர்பார்த்தேன்.

காலங்காலமாக ஆண் வர்க்கம் பெண்களுக்கு வாய், கை, கால், குடும்பம், பிள்ளை.... இப்படிப் பல பூட்டுகளைப் போட்டு அடிமையாக வைத்திருநத்து. இதனால்தான் விபச்சாரி என்ற பதத்துக்கு எதிர்ப் பாற்சொல் எந்த அகராதியிலும் கிடையாது. அதற்காக ஆண் விபச்சாரம் செய்யவில்லை என்பது தவறானது. இன்று அமெரிக்காவில் உடைகளைந்து ஆடுவதில் இருந்து சந்தையில் உடல் வனப்பைக் காட்டி நிற்கிறது ஆணினம். சமத்துவம் பெற்ற பெண்கள் ஆணுக்குச் சமமாக இருந்து இரசித்தும், விரும்பும்போது விலைகொடுத்தும் வாங்குகிறார்கள்.

"பெண் கவர்ச்சியாலும், அழகுடைமையாலும் நெளிவு சுளிவுகளாலும் வார்க்கப் பட்டவள்" என்றும், பலவீனமானவள் என்றும், ஆணைவிடப் பெண்ணுக்குத்தான் விபச்சாரத்தில் அதிகப் பங்குண்டு என்றும் கூறப்படுவது முற்றாக மறுக்கப்பட வேண்டியது. ஒன்றை ஒருத்தி விற்கிறாள் எனில் யாரோ ஒருவன் வாங்குகிறான். ஆதலால் ஆணுக்கும் அதேயளவு பங்குண்டு. பெண் அழகானவள்.... இப்படிப் பல பாடல்களில் எழுத்துகளில் உண்டு. காரணம் ஆண் இரசித்தான்; அதை எழுதுகிறான். ஆனால் பெண்ணும் ஆணை இரசிக்கிறாள், சொல்வதற்கு வாய்ப் பூட்டும் எழுதுவதற்குக் கைப்பூட்டும் போடப் பட்டிருக்கிறது.

ஆணைப் போலப் பெண்ணைச் சுதந்திரமாக விட்டால் புரியும், பெண் ஆணைவிடப் பல மடங்கு சிறந்து நிற்பது. ஆணுக்கு இருக்கும் அதேயளவு ஆசை, இரசிப்புத் தன்மை அனைத்தும் பெண்ணுக்கும் உண்டு. இதைப் பெண் சமஉரிமை உள்ள ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் காணலாம்.


பெண் வேறு வழி இல்லாமலா விபச்சாரம் செய்கிறாள் என்று கேட்கிறார். எத்தனையோ பேட்டிகள், நேரடிச் சந்திப்புகளிலும் அறிந்திருக்கிறேன், எந்த ஒரு விபச்சாரியும் வேறுவழி இன்றியே அதைச் செய்கிறாள். எந்தப் பெண்ணும் அதை விரும்பிச் செய்வதில்லை.

சீதனம் வாங்குதல் எனது நோக்கில் விபச்சாரம்தான். அது மட்டுமல்ல அழகான, அன்பான அந்தப் பெண் ஓர் ஜடத்தைவிடக் கேவலமான முறையில் விற்கப் படுகிறாள். விரும்பிக் கொடுப்பது வேறு. ஆனால் ஆணினம் கேட்டு வாங்குகிறதே.

சமய நம்பிக்கை இல்லாததுதான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்பது முற்றாக மறுக்கப் படவேண்டியது. இதற்குத் தேவை மனச்சாட்சி. பெண்ணும் ஆணைப் போல் உணர்ச்சியுள்ள ஒரு ஜீவன் என்பது முக்கியமானது. அவளின் இடத்தில் நான் இருந்தால் எனது நிலை என்ன, நான் எப்படி உணர்வேன் என்பதை எண்ணிப் பார்த்தால் புரியும் அவளது நிலையும், உணர்வுகளும்.

சமயங்கள் மனிதனைக் குறுகிய வழியில் சிந்திக்க வைத்துள்ளன. இதனால்தான் உலகெங்கும் சமயப் போர் நடக்கிறது. "பெண்ணின் கவர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும், மறைக்கப்பட வேண்டும். சிற்றின்பத்தின் பிறப்பிடம் பெண்கள்" என்று எழுதியிருந்தார். சிற்றின்பத்துக்குத் தூண்டில் போடுபவனே ஆண்தான். அழகான இயற்கை மனிதனுக்காகத் திறந்திருக்கிறது. பூமகளின் சிரிப்பான பூக்களை நாம் ரசிக்கிறோம். ஆனால் பெண்ணின் அழகு மட்டும் ஏன் மறைக்கப்பட வேண்டும்? அழகைக் கண்டதும் ஆண்கள் அபகரிக்கப் பார்க்கிறார்கள். இது ஆணின் வெறித்தனமும் கட்டுக்கடங்காத் தன்மையுமே.

'பூகம்பன்'



## நாங்சங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்

1. இளைய அப்துல்லாஹ் எழுதிய கடிதம் (சுவடுகள் 57) பெண்ணாதிக்கம் இன்னமும் நமது சிந்தனைகளில் எவ்வளவு ஆழமாக வேரோடியுள்ளது என்றே நினைவூட்டியது. அவரது கருத்துகள் தொடர்பாகச் சில வரிகள் எழுதுவது அவசியம் என நினைக்கிறேன்.

பெண்ணின் கவர்ச்சி சிற்றின்ப உணர்வுகளின் பிறப்பிடம் எனவே அது மறைக்கப்பட வேண்டுமென்ற கருத்து பல விதங்களில் பெண்ணைச் சாடுகிறது. முக்கியமாகச் சிற்றின்ப உணர்வு குற்றமென்ற பார்வை ஒருபுறமிருக்க, அக் குற்றத்தின் மையம் பெண்ணென்று கூறப்படுகிறது. மறுபுறம் பெண்களின் காம உணர்வும் மறுக்கப்படுகிறது. இன்றும் பல பழஞ் சமுதாயங்கள் பெண்கள் உடலைப் பெருமளவு மூடுவதில்லை. அச்சமுதாயங்கள் இதனாற் சீரழிந்துவிடவில்லை. எல்லோருமே நிர்வாணமாக வாழும் ஒரு சூழலில் வெற்றுமேனியாக ஒரு பெண் திரிவது எவருக்கும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தாது. பெண்களின் பலவீனங்கள் என்று அவர் குறிப்பிடுவன, முற்றிலும் உண்மையுமல்ல. சில 'பலவீனங்கள்' பெண்ணடிமைத் தனத்தின் நேரடி விளைவுகள்.

விபச்சாரத்திற்கு எவ்வாறு பெண் மட்டுமே காரணமாகலாம்? பெருவாரியான சந்தர்ப்பங்களில் ஆண்கள் தமது காமவேட்டையைத் தணிக்கத் தம் மனைவியரல்லாத பெண்களை நாடி, அது இயலாதபோது, விலை கொடுத்துப் பாலுறவு அனுபவிக்கிறார்கள். உடலை விற்று உழைக்குந் தேவை நமது சமுதாயச் சூழலின் ஒரு விளைவு. தங்கள் அறிவையும் உழைப்பாற்றலையும் பணத்திற்காக விற்கும் நிலையில் மனிதர்கள் உள்ளனர். இதுவும் கேவலமான நிலைதான். மேற்கில் ஆண் விபசாரிகளும் இருக்கிறார்கள். பெண்கள் கையில் உலகின் அதிகாரம் இருந்தால், நிச்சயமாக, விபசாரிகள் ஆண்களாகவே இருப்பார்கள். விபசாரம் என்பது மனித உறவின் சிதைவின் விளைவுகளில் ஒன்று. அடிப்படையான ஒரு சமுதாய மாற்றமின்றி, மனிதருக்கு அவர்களது உழைப்பின் மீதான ஆளுமையின்றி, மனிதரிடையே பால் அடிப்படையிலும் சகல பிற அடிப்படைகளிலும் சமத்துவமின்றி, விபச்சாரத்தைச் சாடுவது பயனற்றது. சீதனத்துக்காக முன்பின் தெரியாத ஒருத்தியை மணக்க வேண்டிய நிலை அவலமானது. அது விபசாரமில்லாவிடில் என்ன, அது விபசாரத்தை விட அதிகம் மேலானதல்ல. பணம் மனித உறவுகளை நிர்ணயிக்கும் இந்த அவல நிலையின் பாதிப்புக்குள்ளானவர்களுள் விபசாரிகளும், சீதனத்திற்காக மணக்கிறவர்களும் இன்னும் பலரும் உட்படுகிறோம்.

இளைய அப்துல்லாஹ் கருதும் தூய்மை என்பது என்ன என்று எனக்கு நிச்சயமில்லை. சரியான மத அனுஷ்டானம் எது? மனிதன் மதத்துடன் இணைவது என்ன விதமாகப் பிரச்சனையைத் தீர்க்கும்? மதம் என்பது தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்தது. அதற்கு ஒரு சமுதாயச் சார்பு உண்டு. இன்று வழக்கிலுள்ள சகல முக்கிய மதங்களும் ஆணாதிக்கச் சூழலிற் தோன்றியவையே. அவை யாவும் காலத்துடன் தமது நடைமுறையை ஓரளவு மாற்றியுள்ளன. அல்லாவிடின் அவை அழிந்துபோயிருப்பன. பெண்களை அடக்கியாளும் கலாசாரக் கருவிகள் பலவும் மதங்களைப் பயன்படுத்துவன. மதங்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநீதி பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலை மேற்கில் ஏற்பட்டுள்ளது. ஆயினும் இன்னுஞ் செய்ய வேண்டியவை மிக அதிகம். குடும்பம், பெண் பற்றிய நமது பழைய கருத்தாங்கங்கள் புதிய சமுதாயச் சூழலில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எக்காலத்துக்குமுரிய உண்மைகளென மனிதர் எதையுமறியார். எக்காலத்துக்குமுரிய விதி என்று எதையும் எவரும் இயற்றவும் இயலாது. பெண்கள் பற்றிய எங்களது மரபுவாதக் கண்ணோட்டங்கள் சரியானவை என்றால், கடவுள், சகல பெண்களையும் ஒளிபுகாத பெட்டிகளில் அடைத்துப் பூமிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2. ஆதவனின் விமர்சனம் சோலைக்கிளியின் கவிதைகளைப் பற்றிச் சற்று ஆழமாகப் போயிருக்கலாம். சில கவிதைகள் பிடித்திருப்பதாகவும் சில அவ்வாறில்லை எனவும் எழுதுகிறார். ஏன் என்று எழுதினால் வாசகர்கட்குப் பயனுள்ளதாக இருக்கும். ஒரு கவிதை, அரசியலாகவோ, போதனையாகவோ புத்திமதியாகவோ ஒரு கருத்தைத் தெரிவித்தால் அது கவிதை இல்லை எனலாமோ? அப்போது பாரதியின் ஆன்மீக, தேசியப் பாடல்கள் எல்லாம் வெறும் செய்யுளாகிவிடாவோ?

ஆணாதிக்கம் என்பது நமது மொழிகளில் ஆழப் பதிந்துள்ள ஒன்று. அதற்கெதிரான செயற்பாடு உணர்வுபூர்வமாவே அமையமுடியும். மரபின இந்தச் சுமையை இறக்குவது எளிதல்ல. பெண்ணுரிமைக்காகக் காத்திரமான குரல்கொடுதத முதலாவது தமிழ்க் கவிஞ் பாரதி. 'பெட்டைப் புலம்பல்', 'பேடிமை' போன்ற சொற்களும், 'ஆண்மை' பற்றிய மரபு சார்ந்த கருத்தாக்கமும் அவராற் தவிர்க்கப் படவில்லை. இதனால் மட்டும் அவர் ஆணாதிக்கவாதி என்று யாரும் சொல்லிவிட இயலாது. சோலைக்கிளியின் எழுத்தில் ஆணாதிக்கத்தின் தாக்கம் தெளிவாகவே உண்டு. (ஆதவனுடைய எழுத்திலும் அது உள்ளது என்பது என் எண்ணம்). பல ஆண் எழுத்தாளர்களும் பெண்

www.tamilarangam.net

எழுத்தாளர்களும் ஆணாதிக்கத்தின் மொழியிலேயே கேள்வியின்றிச் செயற்படுகிறோம். இக்குறைபாட்டை விமர்சன மூலம் நீண்ட காலத்தில் நாம் களையக்கூடும்.

3. தேர்தல் பற்றிய கட்டுரையில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், முன்னாள் இ.தொ.கா. பிரமுகர் செல்லச்சாமியின் உதவியுடன் தன்னைப் பிணையெடுத்த விவரத்தையும் குறிப்பிட்டிருக்கலாம். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ம.ம.மு.வுக்கும் இணக்கம் ஏற்படாமைக்குக் காரணம் கொள்கை சம்பந்தமானதல்ல. ஆசனப் பங்கீடு சம்பந்தமானது. ஸ்ரீ.ல.சு.கட்சியோ ஐ.தே.கட்சியோ முழுமையில் இலங்கையின் தேசியக் கட்சிகளல்ல. பல காலமாக அவை சிங்களத் தேசிய இனத்தின் கட்சிகளாகவே செயற்பட்டு வந்துள்ளன. தமிழர்களது தலைமைகளும் நெடுங்காலமாகவே ஐ.தே.கட்சியை நம்பி வந்துள்ளன. தென்னிலங்கையின் அரசியல் பற்றிய அக்கறையே இல்லாதவிதமாகச் சந்தர்ப்பவாதச் சாட்டுக்களில் சிறுபான்மைத் தேசிய இனத் தலைவர்கள் காட்டும் அக்கறை புதிய ஒன்றல்ல.

யூ.என்.பி.தரப்பில் தமிழர்கள் போட்டியிடுவதால் ஸ்ரீ.ல.சு.கட்சியைவிட நல்ல நிலைப்பாட்டை அது கொண்டிருப்பதாக எவரும் கூறமுடியாது. பொ.மு. ஒரு தமிழரை நிறுத்தி அவரை வெல்லச் செய்யுமளவுக்கு அதற்குத் தமிழர் மத்தியிலே ஒரு தளம் இல்லை என்பது உண்மை. அது ஒரு தமிழ் வேட்பாளரை மலையகத்தில் நிறுத்தி இந்த உண்மையை மாற்றிவிட முடியாது. அதேவேளை தேசிய இனப்பிரச்சனையைப் புதிய அரசு எப்படிக் கையாள்கிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

4. இலங்கை என்ற பேரை ஏன் வலிந்து ஸ்ரீலங்கா என்று எழுதவேண்டும். இந்த நாட்டை (தமிழீழம் பிரிந்தாலும் பிரியாவிட்டாலும்) இலங்கை என்று அழைக்கும் உரிமை சட்டரீதியாகவே நமக்கு உண்டு. ஸ்ரீலங்கா என்ற பேரும் இலங்கை என்ற பேரும் ஒன்றையே குறிப்பன. பின்னது இந்த மண்ணுக்குத் தமிழர் நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்த சொல்லாகும். சுதந்திரத் தமிழீழம் உருவானாலும் தென்னிலங்கையின் மலையகத்தில் மற்றும் மாகாணங்களில் வாழப் போகின்ற தமிழ்பேசும் மககளுக்குத் தம் நாட்டை இலங்கை என்று அழைக்கும் உரிமையை நாம் ஏன் தூக்கி எறியவேண்டும்?

அன்புடன்,
சி.சிவசேகரம்

சுவடுகள் குழுவினர்க்கு,

சுவடுகள் 57ல் தேர்தல் பற்றிய கட்டுரையில் மலையக தொண்டமான் பற்றிச் சரியாகக் கணிப்பீடு செய்திருக்கிறீர்கள். தொண்டா எப்போதும் காட்டிக் கொடுப்பதில் பின்நிற்பதில்லை. இது ஒரு தொடர்கதை.! கடந்தகால வரலாறு கண்ட உண்மையாகும்.

நடந்துமுடிந்த தேர்தலில் ஆளுங்கட்சிக்கு ஆதரவு தேடியவர் – அசுரவேகத்தில் மலையகமெங்கும் சென்றவர், புதிய அரசு வந்தபின்னர், அதனைப் போற்றிப் புகழத் தொடங்கிவிட்டார். தேர்தல் முடிந்த அதன் ஆரவாரம் அடங்கவில்லை. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆளுங்கட்சிக்குப் பரணிபாடத் தொடங்கிவிட்டார்.

ஆளுங்கட்சியிலே இருந்து பழக்கப்பட்டதால் மீளும் ஆளுங்கட்சிக்கு வர ஆசைப்படுகிறார். எத்தகைய அரசியல் 'விபச்சாரம்'!

மலையக மக்களை 'இனி' எத்தனை காலம்தான் எமாற்றுவார்!!

இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டியது மலையக இளைய தலைமுறையிடம்தான் உள்ளது. இதனை 'சுவடுகள்' வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

அந்தனி ஜீவா (செயலாளர்),
மலையக கலை இலக்கியப் பேரவை

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகள் காலம் தாமதித்து வந்தாலும் சுவடுகளின் கனதியும் காத்திரமும் குறையவில்லை. ஆக்கங்கள் அனைத்தும் நன்றாகவே உள்ளது. அதிலும் ஈழத்துத் தேர்தல் பற்றிய கட்டுரை அற்புதம். ஈழத்து அரசியலில் தற்போது புதிய மாற்றம் இடம்பெற்றுள்ளது. இந்த மாற்றத்துடன் வட – கிழக்கில் இடம்பெறும் போருக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் எனத் தமிழ்பேசும் மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை நிலைக்க நாம் பிரார்த்திப்போமாக.

நேசங்களுடன்,
முகமட் அபார்,
இலங்கை

வாசகர் சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


# இணைவும் பிரிவும்

**தேவகி**

ஐரோப்பிய சமூகத்துடன் நோர்வேயை இணைப்பதா என்பதை அறிய இன்னும் ஒருமாத காலத்தில் நிகழவுள்ள சர்வசன வாக்கெடுப்பில் கணிசமானோர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று தேர்தல்களை ஆய்வு செய்யும் ஒருவர் கூறியுள்ளார்.

கணிசமான தொகையினர் ஐரோப்பிய சமூக இணைவுபற்றி உறுதியான முடிவு எடுக்காமலே இன்னும் உள்ளனர். இவர்கள் சர்வசன வாக்கெடுப்பு வரை தமது முடிவுகளை எடுக்க முடியாது தடுமாறுவர் என நம்பப்படுகிறது. எனவே அவர்கள் வாக்களிக்காது தவிர்ப்பர் என நம்பப்படுகிறது.

அண்மையில் :பின்லாந்தில் நிகழ்ந்த ஐரோப்பிய சமூக இணைவு பற்றிய சர்வசன வாக்கெடுப்பில், இணைவுக்கு ஆதரவாகப் பெரும்பான்மை வாக்காளர்கள் வாக்களித்தனர். விரைவில் சுவீடனிலும் இந்த வகையான சர்வசன வாக்கெடுப்பு நிகழவுள்ளது. சுவீடனைப் பொறுத்தவரை கடைசியாக நிகழ்ந்த




அபிப்பிராய வாக்கெடுப்பில் இணைவுக்கு ஆதரவான, எதிர்ப்பான இரு தரப்பினரும் ஒரே அளவினராக உள்ளனர். நோர்வேயில் எதிர்ப்பாளர்கள் ஓரளவு பலம் பொருந்தி விளங்கினாலும், சுவீடனின் முடிவுகள் நோர்வேயைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே பின்லாந்து இணைவது உறுதியாகி விட்டதால் சுவீடனும் இணைந்தால், நோர்வே தனது பிராந்தியத்தில் தனியே நிற்பது சிரமம். ஏற்கனவே டென்மார்க் நீண்டகாலமாக ஐரோப்பிய சமூகத்தில் இணைந்திருக்கிறது.

இவ்வாறான நிலைகளைக் கருத்தில் கொண்டு இரு தரப்பினரும் தமது பிரச்சாரங்களைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். நோர்வேயைப் போலவே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளிலும் மீன்பிடி, விவசாயத்தில் தங்கியுள்ள வடபகுதி வாக்காளர்கள் ஐரோப்பிய சமூக இணைவைக் கடுமையாக எதிர்க்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவ நாரதர்



நாரதர்! யார் என்று பலருக்குத் தெரியாமல் இருக்காது. பண்டய இதிகாசத்தில் ஒருவகைக் கதாநாயகன். அவர் பற்றி இப்ப என்ன என நீங்கள் கேட்கலாம். ஆனால் விசயம் இருக்கு.... நாரதரின் கலகம் நன்மையில் முடியும் என்று சொல்லுவார்கள். அதுக்கு இப்ப என்ன என்று நீங்கள் இப்பவும் கேட்கலாம். நானும் அவருக்குத் தூரத்து உறவுதான் என்று எனது பாட்டியும் அம்மாவும் அடிக்கடி எனக்கு சொல்லுவார்கள். இதுபற்றிக் கனகாலமாக நானும் யோசிச்சுப் பார்த்தன். அந்தத் தூரத்து உறவு விட்டுப்போகக் கூடாது ஏதாவது செய்தாக வேண்டும் எனக்கு ஒரே ஆவல். சும்மா ஏன் விடுவான் எண்டு இஞ்ச சில கலகங்களை (ஐயோ சண்டையில்ல விவாதங்களை) தொடக்கி வைக்கலாம் எண்டு வெளிக்கிட்டிருக்கிறன். இந்தக் கலகங்கள் (விவாதங்கள்) எப்பவும் பிரயோசனமானது தான். ஒரு தெளிவான நிலைக்கு இட்டுச் செல்லுமாம்.... எங்க பார்ப்பம்....

கிட்டடியில நான் 'காதலன்' (சீ வெக்கமா இருக்கு) படம் பார்த்தன். அதில ஒரு ஜெயில் சீன் வருகுது. ஒருவனை இரண்டடி சதுரக் கூட்டுக்குள்ள பூட்டி தடியால குத்தி பொலீசார் (தமிழ் நாடு) சித்திரவதை செய்யினம். அதைக்காட்டி கதாநாயகனுக்குச் சொல்லுகிறாள் ஒரு கொடூர பொலீஸ் அதிகாரிரி (பெண் பொலீஸ் அதுதான் இரண்டு 'ரி') "இவன் ஒரு சிலோன் காரன், இவனை எப்படி அடிச்சாலும் (சித்திரவதைக்கு நாகரீகமான சொல்லு) உண்மையைச்

www.tamilarangam.net

சொல்லமாட்டான்" எண்டு. இது எனக்குச் சத்தியலால தலையில அடிச்சமாதிரி இருந்தது. இதுமட்டுமல்ல அண்மைக் காலமாகப் பல தமிழ்ப்படங்களில் எங்களைப் பற்றி அடிக்கடி வருகுது.... அதுமட்டுமல்ல தமிழகப் பத்திரிகையிலயும் தான். என்ர கேள்வி இதுதான். தமிழக சினிமாவும் பத்திரிகையும் எங்களைக் கேவலப்படுத்துதா, இல்லையா எண்டதுதான். இதுபற்றி உங்கட மண்டைக்குள்ள நிறைய சரக்கு இருக்கும். ஆனால் நீங்கள் எழுதமாட்டீங்கள். அதால எழுதாத ஆக்களுக்கு நான் 'நவ துரோகி' என்று ஒரு பட்டத்தை வைப்பன்.... எங்க பாப்பம்....

---

# 'கொல்லப் பிறந்தவர்கள்'

அண்மையில் நோர்வேயில் வெளிவந்த திரைப்படங்களில் மிகவும் சர்ச்சைக்குள்ளான திரைப்படம், 'நச்சுரல் போண் கில்லர்ஸ்' (Natural born killers).

ஹொலிவூட்டின் புகழ்பெற்ற இயக்குனர்களில் ஒருவரான ஒலிவர் ஸ்ரோணின் இந்தப் படம் மிக அதிகளவிலான, மோசமான வன்முறைக் காட்சிகளைக் கொண்டது என்ற காரணத்தாலேயே இந்தச் சர்ச்சை. பிரிட்டனில் தடை செய்யப்பட்ட இந்தப் படம், நோர்வேயில் 15 வயதுக்கு மேற்பட்டோர் பார்க்கலாம் என்ற அறிவிப்புடன் வெளியானது. பதினைந்து வயதுக்கு மேற்பட்டோர் பார்க்கக்கூடிய படங்களைப் பன்னிரு வயதானோர் தமது பெற்றோருடன் பார்க்கலாம். எனவே இந்த வன்முறை நிறைந்த படத்துக்கு விதிக்கப்பட்ட வயதுக் கட்டுப்பாடு பிழையானது என்ற விவாதம் பலமானதைத் தொடர்ந்து தணிக்கைக் குழு படத்தை மீள்பரிசீலணை செய்து பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமே பார்க்கலாம் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சியாகக் கொலைகள் செய்வோரைத் தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு 'கதாநாயகர்கள்' ஆக்குகின்றன என்பதே படத்தின் கரு. அதன்மூலம் இயக்குனர், தொடர்புச் சாதனங்களைக் கிண்டல் செய்கிறார். ஆனால் கிண்டலைவிட வன்முறை மிக அதிகமாகத் தெரிகிறது என இந்தப் படத்தைப் பற்றி விமர்சகர்கள் கூறுகின்றனர். எவ்வாறாயினும் பல சர்ச்சைக்குரிய, வெற்றிகரமான படங்களைத் தந்த ஒலிவர் ஸ்ரோனுக்கு வர்த்தக ரீதியில் படம் வெற்றியையே தரும் என நம்பப்படுகிறது.



திரைப்பித்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க.ஆதவன்

# மண்மனம்



## அத்தியாயம் ஏழு

பாவம் ரகுநாதன்.

படுத்தபடி.... அதுவும் குப்புறப் படுத்தபடி..... எத்தனை கனவுகள் எத்தனை நினைவுகள்?

நிமிர்ந்து படுத்தால் மட்டும் இவை வராமல் போய்விடுமா?

ரன்மெனிக்கா.... கந்தியின் மகள்... சுசீலா....

ஏனப்பா இதுகள் வந்து ஆளை வாட்டுகின்றன?

முடிந்தவை முடிந்துவிடக்கூடாதா?

Please, தயவுசெய்து நினைவுகள் முகம் நீட்ட முடியாதபடி யாரும் சபிக்கக்கூடாதா?

நிம்மதியாய்... தற்கொலை செய்து சுருக்குப் போட்டவன் போல.....

கைகளிலும் கால்களிலும் நெற்றியிலும் ஆணி அறைந்தாலும்..... சிரித்தபடி யேசுச்சிலை தெரிவது போல....

ஆராவது சிலையாகி சிரித்தபடி இருந்தால், எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்.

மக்கள் புன்சிரிப்பை மறந்துவிட்டார்கள்.

அவர்கள் மோகனத்தை இழந்துவிட்டார்கள்.

அவர்கள் சங்கீதத்தை இப்பொழுது கேட்பதில்லை.

அவர்களது செவிகள் ஏதோ ஏதோவெல்லாம் கேட்கப் பழகிவிட்டன. கண்கள் மட்டும் என்ன குறைவா? கண்றாவி எல்லாம் பார்க்கின்றன. காட்சி.... பசுமை.... எல்லாமே வெறும் பேச்சாகிவிட்டது.

தெரிந்த எல்லாவற்றையுமே, ஒரு முக்கோணத்தினுள் அல்லது ஒரு சதுரத்தினுள் அடக்க மக்கள் - என்னவர்கள் பழகிவிட்டார்கள்.

* * * * * *

இல்லாட்டி ஒரு சங்கீத 'ரீச்சர்' நீலாம்பரியிலை என்ரை சோகத்தைக் கரைக்க ஒரு ஆலாபனை பாடுங்கோவன் எண்டு கேக்க, உங்களுக்கென்ன விசரே....? 'பிறக்ரிக்கலா' இருங்கோவன். இப்ப என்னாலை பாடேலாது என்று சொல்லியிருப்பாளே?"

அவள் கற்ற... கற்பித்த சங்கீதம் எல்லாம் எங்கோ விழலுக்காய் 'பாஷனுக்'காய் இறைத்த நீர் என்றுதான் ரகு யோசித்தான்.

www.tamilarangam.net

* * * * * *

சூசையப்பு தவறணையைப் பூட்ட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

"சூசை! ஒரு அரையை வைச்சிட்டுப் பூட்டுமன்" என்றான் ரகு.

"ரகு அண்ணை! நானும் கேள்விப்பட்டனான்தான் விஷயங்கள். தங்கச்சி இயக்கத்திலை போய்ச் செத்தால் பெருமைதானே! பிறகென்ன?" என்றான் சூசை.

"சூசை என்ரை பிரச்சனை அதில்லை. எல்லாச் சனமும் சாகிறதுதான். ஆனா, அன்பு நினைவு சாகுமோ எண்டு எனக்குத் தெரியாது.

நினைவு சாகுமெண்டா உலகத்திலை ஒரு பிரச்சனையும் இல்லை.

58இலை சிங்களவர் வெட்டின நினைவு செத்தா......

77இலை கடையள் எரிஞ்ச நினைவு செத்தா...

83இலை அகதியாய் கப்பலிலை தமிழன் யாழ்ப்பாணத்துக்கு வந்த நினைவு செத்தா,

நீ... உன்ரை மனிசி சின்னாச்சியோட கொப்பன் யேம்ஸை எதிர்த்து ஓடேக்கை வந்த வெட்டுக்குத்து எண்ட நினைவு செத்தா....

நான் ஏன் குடிக்கிறன்?

நான் ஏன் உன்னட்டை வாறன்?

சில பிரச்சனைகளுக்குச் சில தீர்வுகள் இருக்கு.

ஆனா, எல்லாப் பிரச்சனைக்கும் எல்லாத் தீர்வுகளும் பொருந்தாது சூசை.

* * * * * *

நல்லவெறி ரகுநாதனுக்கு. தூசணம் வாயில் வராதகுறை. மற்றும்படி எல்லாம் தான் வாறன், தான் வாறன் என்று குதித்தன.

சைக்கிளில் ஓடிச் சமாளிக்கலாம் என்றுதான் முதலில் நினைத்தான். ஆனால் ஓடமுடியவில்லை. கைகளை பெலத்துடன் இறுக ஹான்டிலைப் பிடித்தாலும் அது இழுத்துக் கொண்டுபோய் கிழுவை வேலியில் உரசத்தான் செய்தது. ஒன்றல்ல, இரண்டு தடவைகள் விழுந்து புழுதி ஒட்டி.... மீண்டும் சரிப்பண்ணி.... நிதானத்துக்கு வந்து சுசீலாவின் வீட்டுக்கு முன்னால் உள்ள பூவரச மரத்தின் கிளையில் கையைப் பிடித்து 'பலன்ஸ்' பண்ண அதிகாலை மூன்று மணியாயிற்று.

"எடியேய்....! சுசீலா.... வாடி வெளியில.... ஒரு பாட்டுப் பாடத் தெரியாத நீயெல்லாம் ஒரு ரீச்சரோ? இந்தியாவிலை போய் என்ன கிழிச்சனியோடி!

ஒரு ராகம் பாடு எண்டு கேட்டன். பாடினா என்ன குறைஞ்சா போயிடுவாய்?"

நாய்கள் வெருண்டுபோய்க குரைக்க ஆரம்பித்தன. உறுமியபடி ஒரு 'கார்' எங்கிருந்தோ திடீரெனத் தெருவில் போயிற்று. குறட்டை ஒலிகளூடு, "ஆற்றாது?" என்று ஒரு குரல் - நித்திரை வெறியில் புலம்பியது.

"நான்தான்ரா! ரகுநாதன். புடுங்கிறதெண்டாப் புடுங்கு" என்றான் ரகுநாதன் பலத்த குரலில்.

ஊர் அதிர்ந்தது.

மௌனம்.

இடைவெளி.

- மௌனம் - இடைவெளி

தம்பையா வெளியே வந்தார். அப்பாவைத் தொடர்ந்து சுசீலாவும் வந்தாள். தாயும் வந்தாள். சந்தடி கேட்டு அருளண்ணையும் தூரத்தில் வருவது தெரிந்தது.

தம்பையாண்ணை கையிலை ஒரு கொட்டன் தடியைக் கொண்டு வந்தது ரகுநாதனுக்கு எரிச்சலைத் தந்தது. அவன் மண்டையில் நரம்புகளில் உள்ள 'அல்கஹோல்' அதற்குத் தூபம் போட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கட்டையோடை வாறியோ, உன்ரை மோளை உனக்கு ஒழுங்கா வளக்கத் தெரியாது. கொட்டனோடை வாறாய் என்ன?" என்றான் ரகுநாதன்.

கூடிநின்ற ஊர்ச்சனம் வாய்பொத்தி நின்றது. ரகுநாதன் ஒருநாளும் இப்படி நடந்தவனல்லன். தானும் தன்பாடுமாய் இருந்தவன். அவன் வாயே திறப்பதில்லை. 'மௌனசாமி' என்று ஒரு பட்டப் பெயரும்கூட இளைய தலைமுறைக் கொயிலடிப் பெடியங்களால் வழங்கப் பட்டிந்தது.

இன்று,

மௌனம் உடைந்தது. மக்களின் அபிப்பிராயங்கள் தூள் தூளாயின. யாரும் முன்வந்து ரகுநாதனைச் சமாதானப்படுத்த வழியில்லாது போயிற்று. விசரன் மாதிரி.... பெரிய குடிகாரன் மாதிரி..... சைக்கிளைத் தொப்பென்று விழவிட்டான். சாரத்தை மடித்துச் சண்டிக்கட்டாகக் கட்டினான்.


"சேட்டைப் பூழல் விடுறாக்களெல்லாம் வாங்கோ உங்களோடை எனக்கொரு கதை இருக்கு"

ஏதோ ஏதோவெல்லாம் கத்தினான்.

திடீரென்று "எடியேய் சுசீலா, உனக்குக் காதல் எண்டா என்னெண்டு தெரியுமோடி.....?" என்று கத்தினான்.

தம்பையரால் பொறுக்க முடியவில்லை. கொட்டனால் தரையில் ஓங்கி ஒரு அடி அடித்தார், பின்னர் கொட்டனைத் தூக்கித் தூர வீசி எறிந்தார். வேட்டியே ஒரு தடவை சீராகக் கட்டினார்.

"தம்பி ரகு உம்மை ஒரு படிச்ச மனிசன் எண்டு நான் மதிச்சனான். நீர் இப்பிடி நடக்கிறது சரியில்லை. நீர்



www.tamilarangam.net

என்னத்தையும் கதையும். ஆனா, என்ரை மோளையும் குடும்பத்தையும் இழுத்துக் கதையாதையும். எனக்கும் முதுகெலும்பு இருக்கு" என்றார்.

"டேய்! அதை உன்ரை மகளிட்டக் கேளடா" என்றான் ரகுநாதன்.

சுமார் 4மணி. அதிகாலை; ஊர்ச்சனங்களுக்கு ரகுநாதனில் படிப்படியாக எரிச்சல் வந்தது. அவர்களுக்கு என்ன நடக்குது என்றே புரியவில்லை.

தன் பழைய சைக்கிளில் கந்தவன மாஸ்டரும் வந்துவிட்டார்.

"நான் சொல்றதக் கேளும் தம்பி. பொறும்.

என்ரை வீட்டுக்கு வந்து படும். அமைதியாய் இரும். நாளைக்குக் கதைக்கலாம். பேசித் தீர்க்காத பிரச்சனை எண்டு ஒண்டு இந்த உலகத்திலை இல்லை" என்றார்.

"மாஸ்ரர், இதுகளுக்கை நீங்கள் வரப்புடாது. இந்த நாய்களுக்கும், இந்த வேசைக்கும் பாடம் படிப்பிக்காமல் நான் வரமாட்டன்"

தடுத்த கைகளையும் உதறிவிட்டு ஏதோ போர்க்களம் போபவன் போல் மாறினான் ரகுநாதன்.

இப்பொழுது ஊர்ச்சனம் முற்றாகவே ரகுநாதனை எதிர்த்தது. அவன் யாரையும் மதிக்காமல், அதுவும் கந்தவன மாஸ்ரரையும் மதிக்காமல் பேசியது பிழையாகப் பட்டது.

"உவனுக்கென்னடா இப்பிடி வாய்?"

"புடிச்சுக் கட்டுங்கோடா"

"வெறி எண்டாலும் ஒரு மட்டுக்கு"

"------யை அறுங்கோடா கொழுப்புக் கூடிப்போச்சு"

இப்படியெல்லாம் சனங்களின் கொந்தளிப்பு கூடிக்கொண்டு போயிற்று.

எங்கிருந்தோ ஒரு' 'மோட்டார் சைக்கிள்' சத்தம் கேட்டது.

சனங்களின் கவனம் சத்தம் வந்த திசையில் திரும்பியது. 'ஹொண்டா பைக்'கில் சுரேஷ் வந்து இறங்கினான். பின்னால் ஒரு எஸ்.எஸ்.ஜி.யுடன் அவனது 'பொடி கார்ட்'டும் இறங்கினான்.

"மச்சான் ரகு, இனிக்காணும். போய்ப் படு. இதென்ன ஊர் முழுக்க வந்திட்டுது பார்" என்றான் சுரேஷ்.

"போடா பேயா, வடலிக்கை என்ரை தங்கச்சியைக் கொஞ்சினாய். ஓ.கே. எண்டன். இயக்கத்துக்கை சேத்தாய். ஓ.கே. எண்டன். இப்ப வீரமரணம் எண்டு தற்கொலை! ஓ.கே எண்டு சொல்ல முடியாமக் கிடக்கு"

ஏதோ புலம்பினான் ரகு.

"ரகு எல்லாம் ஓகேதான். அலையளை நாங்கள் வணங்கிறந்தான்" சுரேஷ்.

"போடா, உனக்கென்னடா தெரியும் காதலைப் பற்றி...! என்ரை



www.tamilarangam.net

தங்கச்சியின்ரை காதலைப் பற்றி" கத்தினான் ரகு.

ஊர் பயந்துவிட்டது.

ஏதோ நடக்கப் போகிறது.

சுரேஷ் தன் 'பொடி கார்டை'ப் பார்த்தான்.

சனங்கள் மெதுவாக நழுவ ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது -

திடீரென

சுசீலா ஓடி வந்தாள்.

ரகுநாதனின் கையைப் பிடித்துக் கொற இழுவையில் இழுத்துக்கொண்டு போனாள். போகும்பொழுது, "காதலும் கத்தரிக்காயும்

உங்களுக்குத் தேவையானதெல்லாம் என்ன?

ஒரு நீலாம்பரி ஆலாபனைதானே! வாங்கோ"

பொரிந்துகொண்டு போனாள்.

* * * * * *

கருப்பையில் சுருண்டபடி குழந்தைகள் கிடப்பது போல ரகுநாதன் சுருண்டபடி அந்த மூலையில் கட்டையாய்க் கிடந்தான்.

அந்தக் கொயிலடியையே....

ஊரையே.... நாய்களையே...

பூவரச மரங்களையே.....

உறங்கவைக்கும் தாலாட்டு நீலாம்பரியை எதிரே உட்கார்ந்து.....

தன் சக்தி எல்லாம் கூட்டி அழுது அழுது பாடிக் கொண்டிருந்தாள் சுசீலா!

(இனி)



# பெற்றோல் நிலைய இரவு

வசந்தம் வந்துவிட்டது
நீ வரப்போகிறாய் என்று
சொல்கிறாய்.

பெயர் தெரியா மரமெல்லாம்
பூக்கள்
இலையிலா மரங்களிலும் பூக்கள்
முல்லைபோல சின்னப் பூக்கள்
பெரிய பூக்கள் அரளி போல
செவ்விரத்தம் பூக்களையும் கடைகளில்
பார்த்துள்ளேன், செவ்வந்தியும்
விற்பனைக்குண்டு.

மஞ்சள், மண்ணிறம், வெளிர்பச்சை,
ஊதா, சவிப்பு, நீலம் என
எல்லா நிறங்களிலும்
பூக்கள்
பூக்கள்
பூக்கள்

பூக்களோடு நின்று
புகைப்படமெடுக்கும் ஆசை
ஆண்டுகளாய்த் தொடர்கிறது
வேலை, சமையல், நித்திரையென
வாழ்க்கை படர்கிறது

காற்றோடு கைகுலுக்கி
பூக்களோடு புன்னகைக்க
காலமெல்லாம் நான் காத்திருக்கிறேன்

நீ வரப்போகிறாய்:
லண்டன் பூத்துக் குலுங்குது

**கூடலசங்கமதேவன்**
**180492**

www.tamilarangam.net

# குழப்பத்தை விளைவித்த நோபல் பரிசு

சஞ்சயன்



வருடாவருடம் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் உலகின் கவனத்தை ஒஸ்லோவின் பக்கம் திருப்பும் சமாதானத்திற்கான நோபல் பரிசு இம்முறை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத், இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ரபீன், வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் ஆகியோருக்கு வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஒற்றுமையை (?) ஏற்படுத்திய ஒஸ்லோ ஒப்பந்தம் (Oslo avtale), பாலஸ்தீன மக்களின் தேசிய எழுச்சிப் போராட்டத்தைச் சமாதான வழியிலா சாவுப் பாதையிலா நடத்திச் செல்லப் போகிறது என்ற சந்தேகம் பாலஸ்தீனரிடையே தீவிரமாகத் தோன்றியுள்ள இந்தச் சமயத்தில் பரிசு இரு தரப்பின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மக்கள் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், நோபல் தேர்வுக் குழுவின் உறுப்பினருமான கோற கிறிஸ்ரியான்சன் (Kaare Kristiansen), யசீர் அரபாத்துக்குப் பரிசு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியிட்ட கருத்துகள் தொடர்புச் சாதனங்கள் மத்தியில் மட்டுமன்றிப் பொதுமக்கள் மத்தியிலும் பலத்த சர்ச்சையை உருவாக்கியுள்ளன. அரபாத் பரிசு பெற்றதையொட்டி இவர் தனது பதவியைத் துறந்துள்ளார்.

கோற கிறிஸ்ரியான்சன் மிக நீண்ட காலமாகவே இஸ்ரேலின் நண்பராக இருந்து வருபவர். அதேவேளை தன்னைத் தீவிர கிறிஸ்தவ மரபுவாதியாகவு[ம்] அடையாளப்படுத்தி வந்துள்ளார்.

கிறிஸ்தவ மக்கள் கட்சியின் அங்கத்தவரும் அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இவர், அண்மையில் கருத்தடை தொடர்பாக அண்மையில் தெரிவித்திருந்த கருத்துகள் இவரது கட்சிக்குள்ளேயே பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தத[ு] குறிப்பிடத் தக்கது.

யசீர் அரபாத்தைப் பயங்கரவாதி என்[று] குறிப்பிட்டுப் பதவிவிலகிய கிறிஸ்ரியான்சனின் கருத்துகள் நோர்வேயில் பொதுவாகக் கண்டிக்கப் பட்டாலும், இஸ்ரேலின் பயங்கரவாதத்தைக் கண்டிப்பதில் உறுதியான குரல்களை[த்] தொடர்புச் சாதனங்களி[ல்] காணமுடியவில்லை.

நோபல் தெரிவுக்குழுவின் கடந்த 90வ[ருட] வரலாற்றில் முதன்முதலாகப் பரிசு வழங்க[ல்] தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்துக் குழு உறுப்பினர் ஒருவர் வெளியேறியுள்ளார். குழுவின் ஒழுங்கு விதிகளின்படி கோறவின் இடத்துக்கு மத்திய கட்சியைச் (Senterparti) சேர்ந்த ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்